REGISTERED AT THE G. P. O. AS A NEWSPAPER

# ஈழகேசரி

தேசிய வார வெளியீடு

மலர் 19 | சுன்னுகம், சர்வதாரி பங். உஅ (காந்தி ஆண்டு 80) 10-4-'49, ஞாயிறு | இதழ் 36

கணக்குப் பதிவு நூல்

BOOKKEEPING in Tamil

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி ஆசிரியர்
க. நவரத்தினம் F.C.I. (Eng)
அவர்களால்

மாணவர்கட்கும்
வியாபார ஸ்தாபனங்கட்கும்
உபயோகப்படக்கூடிய முறையில்
விரிவாக எழுதப்பட்டுளது

விலை ரூபா 3.50..... தபாற் செலவு சதம் 50.

தனலக்குமி புத்தகசாலை
சுன்னுகம்

# நீதி நிதானமற்ற செலவு

## பேராதனைக் கட்டட ஊழல்

**வரையறையான திட்டங்களின்றிச் சில காரியங்களை இலங்கை அரசாங்கம் செய்து வருவதால் அதிக பணமும் காலமும் விரையமாவதுடன், நாட்டுமக்களின் நகைப்புக்கும் இடமாகி விடுகின்றது.**

**பேராதனையில் நிறுவப்பெற்றுவரும் இலங்கைப் பல்கலைக் கழகத்துப் புதிய கட்டடங்களும் இன்று இந்த நிர்ப்பந்தத்துக்கு உள்ளாகி விட்டதோ என்று எண்ணவேண்டியிருக்கின்றது.**

இலங்கைப் பல்கலைக் கழகத்து மன்றம் சமீபத்திற் கூடிய போது, ஸ்ரீ ஸி. சுந்தரலிங்கம் அவர்கள் புதிய கட்டட அமைப்பு முறைகளைப்பற்றி நன்ருகக் கண்டித்திருக்கின்ருர். எனவே, இவ்வளவு காலமும் கட்டிமுடிந்த கட்டட வேலைகளைப் பற்றிய அறிக்கையைப் படித்த பின்னர், அதில் உள்ள சில அம்சங்களை ஏற்க மறுத்திருப்பதுடன், அவற்றைப் பரிசீலனை செய்யும் படி பல்கலைக் கழகத்துச் சபைக்குச் சமர்ப்பித் திருக்கின்ருர்.

ஏழாவது ஆண்டு அறிக்கையை மன்றம் ஆராய்ந்த போதுதான் இந்த நிலைமை ஏற்படலாயிற்று. பல்கலைக் கழகத்துச் சபையின் தீர்ப்பை ஆட்சேபித்து இத்தகைய பிரேரணையை மன்றத்திற் சமர்ப்பிக்க முடியாதெனப் பதில் அத்தியட்சகரான கல்வி மந்திரி நுகவெல அவர்கள் ஆட்சேபித்தார்.

இதைக்கேட்ட ஸ்ரீ சுந்தரலிங்கம் தக்க பதில் அளித்திருக்கின்ருர்போலத் தோன்றுகின்றது. பொதுமக்களுக்கு உண்மையான நிலையைப் பல்கலைக் கழகச் சபையினர் விளக்க மறுத்திருப்பதினுற்ருன், தாம் அவ்வாறு நடந்துகொள்ள வேண்டியிருப்பதாக அவர் தெரிவித்தார்.

### வீண் வேலை

அப்படியிருந்தும் ஸ்ரீ நுகவெல அவர்கள் ஸ்ரீ சுந்தரலிங்கத்தின் பிரேரணையை ஏற்க மறுத்துவிட்டார். அது தான் முடியாத போதிலும் தமது பிரேரணையில் ஒரு பகுதியையாயினும் ஏற்றுப் பேராதனையில் நடைபெற்று வரும் வெட்கமான வேலைப்பாடுகளையும், கிஞ்சற்றனங்களையும் மன்றத்தின் கவனத்துக்கு எடுத்துக் காட்டுவதாக வற்புறுத்தி நின்ருர். அவர் தொடர்ந்து பேசியதாவது: பல்கலைக் கழகம் நிறுவப்படும் நிலப்பரப்பைப்பற்றி நான் கூறியதைப் போக்குவரத்து மந்திரி அன்று ஆட்சேபித்திருந்தார். ஆனல் பல்கலைக்கழகம் விடுத்துள்ள அறிக்கையில் நான் தெரிவித்த விபரங்களே காணப்படுகின்றன. கட்டடங்கள் அமைப்பதற்கென தெரியப்பட்ட இடம் உகந்ததல்ல என்பதை இன்று அங்கு நிறுவப்பட்டுள்ள கட்டடங்களே எடுத்துரைக்கின்றன. அரசாங்கம் 1,800 பரப்பு நிலத்தைப் பணங்கொடுத்து வாங்கிய போதிலும் 33 பரப்பு நிலமே இன்று கட்டடங்கள் அமைப்பதற்கு ஏற்றதாக இருக்கின்றது. தவிர, கட்டடங்கள் அமைப்பதற்குச் செலவாகும் பணத்தின் தொகை இம்மாத்திரமன்று. பேராசிரியர்கள் தங்குவதற்கென அமைக்கப்படும் கட்டடங்கள் ஒவ்வொன்றுக்கும் ரூபாய் 150,000 செலவாகின்றது. இதுவரை ரூபாய் 7,000,000 செலவாகிவிட்டது. இவ்விரு கட்டடங்களிலும் ஆகக்கூடி 65 மாணவர்களே தங்குவதற்கே இடமுண்டு. 30 அடி உயரமும் 150 அடி நீளமும் உள்ள சுவர்களை எழுப்புவதற்கு அதிக தொகையான பணம் இறைக்கப்பட்டிருக்கின்றது."

இவ்வளவு விபரங்களையும் தெரிவிப்பதால் பயன் யாதென ஸ்ரீ நுகவெல கேட்டபோது ஸ்ரீ சுந்தரலிங்கம் கூறியதாவது: "தண்டாடப்பட்ட எனது பிரேரணையைத் தானும் பல்கலைக்கழக மன்றம் ஏற்குமாயின் அதுஓரளவு வெற்றியைக் கொடுக்குமென்றே நம்புகின்றேன்."

# வள்ளுவர் தந்த காந்தீயம்

## வீரத் தமிழன் முரசொலி

காந்திஜியின் அரசியற் கொள்கைகளை வள்ளுவரில் உரைத்துப் பார்த்து, அதன் உயர்வை எடுத்துக் காட்டுவதில் தமிழ் முரசு ஆசிரியர் ம. பொ. சிவஞானகிராமணியார் திறமை பூண்டவர் என்பதைச் சென்ற புதன்கிழமை அவருடைய பேச்சை யாழ்ப்பாணம் முற்றவெளியிற் கேட்டவர்கள் ஒருமுகமாக முடிவு கட்டியிருப்பார்கள். காந்தீயத்தை வள்ளுவரின் கண்ணுடிக்கு ஊடாகவே அவர் நோக்குகின்ருர்.

அவ்வளவு கச்சிதமாகவும் வரம்பு மீருமலும் அவர் காந்தியத் தத்துவங்களை விளக்கியதுடன், தமிழ்ப் பண்பாட்டில் வேர்கொண்டு பரந்து செறிந்த தல்லவா காந்திஜியின் அரசியற் கொள்கை என்பதை மிகவும் சமார்த்தியமாக நிலைநாட்டி வைத்தார்.

இயற்கை அன்னையே தனது உடலைப் பிளந்துகாட்டுவதுபோன்று, மோஹெஞ்சோதாரோ ஹரப்பா என்ற இடங்களிலே வெடித்துக் கிளம்பிய புதை பொருள்கள் தமிழ் மக்களின் உயர்ந்த நாகரீகத்துக்கு அழியாச் சின்னங்களாக உலகிடை நிலவி வருகின்றன வென்பதை அவர் உணர்ச்சியுடன் பேசினுர்.

அன்று நடைபெற்ற அக் கூட்டத்துக்கு நியாயவாதியும், காந்திஜியின் தத்துவங்களை நன்கு உணர்ந்துள்ளவருமான ஸ்ரீ எஸ். ஏச். பேரின்பநாயகம் அவர்கள் தலைமை வகித்தார்கள். யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த ஸ்ரீ சிவஞானம் அவர்களையும் பிரசண்ட விகடன் துணையாசிரியர் அ. இளங்கோவன் அவர்களையும் யாழ்ப்பாண மக்களின் சார்பாக நியாயவாதி ஸ்ரீ எம். பாலசுந்தரம் அவர்கள் வரவேற்று அவ்விருவரையும் சபையோருக்கு அறிமுகப்படுத்தி வைத்தார்.

(தொடர்ச்சி 6-ம் பக்கம் பார்க்க)

# சதுப்புநில யோகம் கொழும்பு-நிருபர் கடிதம்-



## நடைபாதை நெருக்கடி

8-4-49

நாட்டிலே வேலையில்லாத்திண்டாட்டம் பெருகிவருவதைத் தடுப்பதற்கு, அரசாங்கம் கடந்த சில ஆண்டுகளாகப் பல்வேறு திட்டங்களை வகுத்துவருகின்றது. வேலையற்றவர்களின் பெயர்களைப் பதிந்து அவர்களுக்கு அவ்வப்போது வேலை கொடுப்பதற்கெனவும் ஓர் அரசாங்கக் காரியாலயம் முயற்சி செய்துவருகிறது.

எவ்வளவு ஏற்பாடுகளைச் செய்துவந்தாலும், வேலையற்ருேர்களின் தொகை நாளாந்தம்பெருகிக்கொண்டேயிருக்கின்றது. அத்துடன் வாழ்க்கைச் செலவும் குறைந்தபாடில்லை.

### சபையின் முடிபு

வேலையில்லாப் பிரச்சினையை ஆராய்ந்து அதற்கான யோசனைகளைக் கூறுவதற்குச் சமீபத்தில் மந்திரி சபையினர் ஒரு நிர்வாக சபையை ஏற்படுத்தியிருந்தனர். இவர்கள் செய்துள்ளமுடிவின் பிரகாரம், கொழும்பு நகருக்கு அணித்தாக உள்ள சதுப்பு நிலங்களை நிரப்புவதற்குத் தொழிலாளர்கள் வேலைக்கு அமர்த்தப்படுவார்கள் எனத் தெரிகின்றது. எனவே, சேறும், சுரியும் நிறைந்த சதுப்பு நிலங்களைப் பெறுவதற்கு அரசாங்கம் வெகு துரிதமாக முயற்சிக்கப்போகின்றது.

மாளிகாவத்தையி லுள்ள சதுப்பு நிலங்களே முதலாவதாக நிரப்பப்படும். தவிர அரசாங்கம் வேறு சிற் சில இடங்களிலும் தற்காலிகமான காரியாலயங்களை ஏற்படுத்தி வேலையற்ருேரின் பெயர்களைப் பதிவுசெய்யப் போகின்றது. வேறுமோர் புதிய யோசனை இவர்களுக்கு உதித்திருக்கின்றது. அதாவது: உப நகரங்களைப் புதிதாக அமைப்பதன் மூலம் வேலை யற்ருேர் பலருக்கு உழைப்புக்கு வழி காட்ட முடியுமென அரசாங்கம் கருதுகின்றது.

சதுப்பு நிலங்களை ஒப்புரவு செய்து, உப நகரங்களையும் அமைத்த பின்னர் வேறு என்ன புதிய வழிகளைக் கண்டுபிடிக்கப் போகின்றரோ தெரியவில்லை.

நாட்டின் பொருளாதார நிலையைச் செப்பனிடாமற் சதுப்பு நிலத்துக்கு மண் போட்டு நிரவினுல் வேலையில்லாத் திண்டாட்டம் ஓடி மறைந்துவிடுமா?

### சீமைக்குப் பிரதமர்

லண்டனில் நடைபெறவிருக்கும் சாம்ராச்சிய மந்திரிகளின் மகாநாட்டுக்குப் பிரதமர் சேனநாயகாவும் விஜயம் செய்கின்ருர். அதற்கான ஒழுங்குகள் மும்முரமாய் நடைபெறுகின்றன. இம்மாதம் 18-ந் திகதி பிரதமர் சீமைக்குப் புறப்படுவார் எனப் பேசப்படுகின்றது. விமான மார்க்கமாகச் செல்லும் பிரதமர், காரச்சியில் இறங்கிப் பாகிஸ்தான் பிரதமரான லியாகத் அலி கான் அவர்களையும் தம்முடன் அழைத்துச் செல்வாரென அறியக்கிடக்கின்றது.

1948-ம் ஆண்டு ஒக்டோபர் மாதத்தில் நடைபெற்ற மந்திரிமாரின் மகாநாட்டுக்கு ஸ்ரீ சேனநாயகா விஜயம் செய்தபோது, பம்பாயில இந்தியப் பிரதமர் நேருஜியைச் சந்தித்து அவருடன் சேர்ந்து லண்டனுக்குப் பறந்தார்.

பிரதமர் சேனநாயகா மூன்றுவார காலத்துக்கு லண்டனில் நிற்பார். அவர் அங்கு நிற்கும்போது இங்கு யார் அப்பதவியை வகிக்கக்கூடுமென வாசகர்கள் கருதக்கூடும். இது ஒரு குறுகிய கால எல்லையாக இருப்பதால் எவரும் தற்காலிகமாக அப்பதவியை வகிக்கமாட்டார்கள். அவசர விஷயங்கள் எழும் வேளைகளில் எல்லாம் சபை முதல்வரான மந்திரி பண்டாரநாயகா ஆகவேண்டியவற்றைக் கவனித்துக்கொள்ளுவார்.

### சிங்களத் தேசாதிபதி

இலங்கையின் பிரதம தேசாதிபதியான சேர் ஹென்றி மூர் என்பவர் ஜூன் மாதம் பிற்பகுதியில் இலங்கையை விட்டு லண்டன் செல்கின்ருர். இவருக்குப் பின்னர் பிரபு ஸோல்பெரி அவர்களே இலங்கையின் பிரதம தேசாதிபதியாகக் கடமை யாற்றுவார். ஆனல் இப்பிரபு இவ்வாண்டு செப்டம்பர் மாதமே இலங்கைக் கரையை வந்தடைவாரென அறியக்கிடக்கின்றது. இந்த இடைக் காலத்தில் இராணிமாளிகையிலே சௌகரியமாக வீற்றிருக்கும் ஓர் அரிய சந்தர்ப்பம் பிரதம நீதியாசரான ஸ்ரீ ஈ. ஏ. எல். விஜயவர்த்தன் அவர்களுக்குக் கிடைத்திருக்கின்றது. சுதந்திரம்பெற்ற இலங்கையின் முதலாவது சிங்களப் பதிற்பிரதம தேசாதிபதியாகப் பதவி வகிக்கும் பெருமை பிரதம நீதியாசருக்கே கிடைத்திருக்கின்றது.

### "போய்வாருங்கள்"

இலங்கையின் பிரதமப் பிரதிநிதியாக இந்தியாவிற் கடமையாற்றிய இராணி அப்புக்காத்து சில்வா என்பவர் ஊர் திரும்பிவிட்டார். அப்பதவிக்கு நியமிக்கப்பட்ட சேர் அருணசலம் மகாதேவா அவர்கள் திங்கட்கிழமைகாலை விமானத்திற் புது டில்லிக்குப் பறந்து சென்ருர். "போய் வாருங்கள்" என்று கூறி அவரை வழியனுப்பி வைப்பதற்கு இரத்மலான விமான நிலையத்துக்குப் பிரதமர் சேனநாயகாவும் சென்றிருந்தார். அங்கு காணப்பட்ட பரமேஸ்வரக்கல்லூரி அதிபர் ஸ்ரீ சு. நடேசபிள்ளை அவர்களும் புதுடில்லி சென்று திரும்புவார் என அறியக்கிடக்கின்றது.

### பிரதிநிதிகள் சம்பளம்

இலங்கைப் பிரதிநிதிகள் சபையின் அங்கத்தினர் பிரதி

(தொடர்ச்சி 7-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஊ............ர் வதந்தி



● கொண்டோடி ●

● ஆசிரியர்களை நம்மவர்கள் இருபிரிவுகளாக வைத்திருக்கிருர்களாம்.

☼ ஒன்று உபாத்தியாயர்களாம்.

☼ மற்றது சட்டம்பிமாராம்.

☼ இப்பிரிவிலுள்ள சட்டம்பிமார் பெரும்பாடு படுத்துகிருர்களாம்.

☼ இதற்கு என்ன செய்யலாமென்று நம்மவர்கள் ஒரு கூட்டம் கூடினுர்களாம்.

☼ சட்டம்பிமாரைச் சுட்டுத் தள்ள வேண்டுமென்று ஒரு தீர்மானம் ஏகமனதாக நிறைவேறிற்ரும்.

☼ ஏகமனதாக நிறைவேறுமுன் வாக்குவாதங்களும் நடைபெற்றனவாம்.

☼ ஒரு கட்சி நெருப்புக்கொள்ளியாலே சுடவேண்டுமென்றதாம்.

☼ இன்னெரு கட்சி சன்னம் போட்டுத் துப்பாக்கியால் வெடி தீரவேண்டுமென்றதாம்.

☼ இவ்விரு கட்சிகளும் சேர்ந்து இன்னுமொரு முடிபிற்கு வந்தனராம்.

☼ துப்பாக்கியிலே சாணம் போட்டுச் சுடவேண்டுமென்றதாம்.

☼ இந்தத் தீர்மானத்தை ஏலம் போட்டார்களாம்.

☼ ஏலத்திஞற் பெற்ற பணத்தைக் கொண்டுதான் சாணம் வாங்கப் போகிருர்களாம்.

☼ இதை எல்லோரும் மெச்சுகின்ருர்களாம்.

● யாழ்ப்பாணம் இந்துமகாசபையையும் மெச்சவேண்டியிருக்கிறதாம்.

☼ சைவ ஆலயங்களில் நடக்கும் உயிர்ப்பலியைச் சட்டபூர்வமாக நிறுத்தவேண்டுமாம்.

☼ இந்த வேண்டுகோளை யாழ்ப்பாண நகரசபைக்குச் சமர்ப்பித்தார்களாம்.

☼ அதோடு மாத்திரம் நிற்கவில்லையாம்.

☼ பாராளுமன்ற அங்கத்தவர்களுக்கும் சமர்ப்பித்தார்களாம்.

☼ இந்தக் கொலைவளர்க்கும் கைங்கர்யத்தைக் கலைவளர்ப்போர் என்ன செய்கிருர்களென்றும் பார்ப்போமாம்.

☼ இதைக் கேட்டவுடன் கோழிகளும் ஆடுகளும் ஒரே சிரிப்பாய்ச் சிரித்தனவாம்.

☼ ஆதிபாம் பொருளுக்கு இதை நிஅத்தும்படி ஒரு பெட்டிசம் அனுப்பிவைத்தால் என்னவென்று சில பூசாரிமார் கேட்கிருர்கனாம்;

☼ இந்த . நெருக்கடியைப் பார்த்துக் களிப்புற்றும் சிலர் இருக்கின்றனராம்.

● கல்விப் பகுதியிலேயும் பெரும் நெருக்கடியாம்

☼ தற்காலிக வித்தியாதிபதி பதவியைக் குறித்தே இது எழுந்ததாம்.

☼ கல்விப்பகுதியைச் சேராத ஒருவரை வித்தியாதிபதி ஆக்க அரசாங்கம் முயலுகின்றதாம்.

☼ இதைக் கல்விப்பகுதியினரிற் சிலர் விரும்பவில்லையாம்.

☼ விரும்பாதார்கள் விலக வேண்டிவரும் என்ற நோக்கமும் இருக்கிறதாம்.

● யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரிப் பரிசளிப்பு விழாவின்போது கொழும்பு மேற்றிராணியார் கல்வியின் நோக்கம் என்ன வென்று சொன்ஞராம்.

☼ கல்வியை விட நமக்கு வேண்டியது விவேகமாம்.

☼ அல்லது கல்வியை உபயோகிக்க விவேகம் வேண்டுமென்ருராம்.

● பட்டினியால் வதங்கிவாடும் மக்களுக்கு விவேகமில்லையாம்.

☼ புதுவருஷத்தை உத்தேசித்து அடுத்தவாரம் அரைக்கொத்தரிசி கூடுதலாகக் கிடைக்குமாம்.

☼ தொழிலாளர், சாதாரணம், குழந்தை என்று வேறுபாடின்றி ஒவ்வொரு அரிசிக்கூப்பனுக்கும் கூடுதலாக அரைக்கொத்தரிசி கொடுக்கப்படுமாம்.

☼ இதை உத்தேசித்து, ஆலோசித்துப் பிரயோகித்த உணவு மந்திரிக் காரியாலயத்திற்கு என்ன செய்யலாமென்று நம்மவர்கள் யோசிக்கிருர்களாம்.

☼ காரியாலயம் பழுதடைந்து விடாதபடி இன்னும் சில கற்களை உயரப்போட்டு வைத்தாலென்னவாம்.

● அரசாங்க ஊழியர்களுக்கும் உயரப்பறக்க விருப்பமேற்பட்டிருக்கிறதாம்.

☼ ஈஸ்றர் விடுமுறைக்கு இவர்களெல்லாம் கொழும்பிலிருந்து பறந்து வருவார்களாம்.

☼ பலாலி, மயிலிட்டி, ஒட்டகப்புலம், முலவைப்பகுதி போன்ற ஊர்களில் வசிக்கும் அரசாங்க ஊழியர்களுக்குத்தான் வாசியாம்.

☼ ஆகாய விமானத்திினின்று இறங்கித்தகரடப்பாவையும் கையில் தூக்கிக்கொண்டு குறுக்குப் பாதையால் போவார்களாம்.

☼ இதைப் படம் பிடிக்கக் கொழும்புப் பத்திரிகாலயங்கள் படம் பிடிப்பவர்களை அனுப்பிவைப்பார்களாம்.

● தெங்குப் பொருட்சபையினர் திரு. பாராஜசிங்கத்தைத் தலைவனுக வைத்து ஒரு குழாத்தைத் தென்னிந்தியாவிற்கு அனுப்பிவைத்தார்களாம்.

☼ இக்குழாம், எர்ணுக்குளம் அலெப்பி, கலிக்கட் முதலிய மலையாள பிரதேசங்களிலுள்ள தெங்குப் பொருட்சாலைகளைப் பார்த்தார்களாம்.

☼ இலங்கையைப் போலவே மலையாளக்கரைப் பகுதியும் இருக்கிறதென்று, திரு. பாராஜசிங்கம் சொன்ஞராம்.

☼ கலுவாக்காட்டிலிருக்கும். திரு. இராமன் நாயரும் மலையாளக் கரைப்பகுதியைப் போலவே இலங்கையும் இருக்கிறதென்று முன்னெருமுறை சொன்ஞராம்.


சிறந்தபலனுக்கு

# C. C. C. புகையிலைப்பசளை

கொழும்பு
கொம்மேர்ஷல்
கொம்பனியார்

இரண்டு விதமான வெவ்வேறு கலவைகள் எங்களால் தயாரிக்கப்பட்டுக் கொடுக்கப்படுகின்றன. ஒன்று சப்புகிற புகையிலைக்கு வேண்டிய மாதிரியிற் பிரத்தியேகமாகக் கலவை செய்யப்படுகிறது. மற்றது சுருட்டுப் புகையிலை அல்லது குடி புகையிலைக்கு வேண்டிய மாதிரியில். இவ்விரு கலவைகளும் தோற்றத்தில் அதிக வித்தியாசமுடையவை. கமக்காரர்கள் தங்கள் தேவைக்கு எழுதும்போது தாங்கள் பசளையிடப்போகும் புகையிலை (மேலேகாட்டிய) எந்த வகையைச் சேர்ந்ததென விபரமாகக் கூறவேண்டும்

# C. C. C.

## கொழும்பு கொம்மேர்ஷல் கொம்பனி

லிமிற்றெட்

[பெரிய பிரித்தானியாவில் சமுதாயமாக்கப்பட்டு, அங்கத்தவர்களின் உத்தரவாதம் மட்டுப்படுத்தப்பட்டது.]

விசேஷ ஆலோசனை இலவசமாகக் கூறப்படும். எங்கள் விசேஷ விற்பனை ஒழுங்குகளைப்பற்றியவிபரங்களுக்கு உடனே எழுதவும்.

The
**Colombo Commercial Company**
LIMITED.

INCORPORATED IN
GREAT BRITAIN
LIABILITY OF MEMBERS Ltd.

(304)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கம்பரும் வான்மீகியும்

# பொய்கையின் தோற்றம்

கே. எஸ். கே.

பம்பைப் பொய்கையை அணுகிய தலைவன் அந் நீர் நிலையின் அழகிய தோற்றத்தில் மனதைத் தோற்றுவிடுகிறான். தன்னை மறந்து இயற்கையெழிலில் ஆழ்ந்து நிற்கும் அவ்வரசிளங் குமரன் பக்கத் துணையாய் நிற்கும் இலக்குவனையும் அத் தெய்வீகக் காட்சியை அனுபவிக்கச் செய்கிறான்:-

ஸௌமித்ரே, சோபதேபம்பா
வைடூர்ய விமலோதகா.
புல்ல பத்மோத்பல வதீ
சோபிதா விவிதை: த்ருமை:

'சுமித்திரை மைந்தனே, வைடூர்யம்போலத் தெளிவான தண்ணீரையுடைய இப் பம்பை மிகவும் அழகாயிருக்கிறது. மலர்ந்த தாமரையும் கருநெய்தலும் நிறையப்பெற்று வேறு வேறு வகையான மரங்களாற் சூழப்பட்டிருக்கிறது' என்று புகழுகிறான்.

இச்சுலோகத்தின் பொருட் செறிவும் கற்பனைத் திறனும் மிகவும் அழகியவை. பளிங்கு போலத் தெளிந்த நீரையுடைய தடாகம், அதில் பல்வேறு நிறமுள்ள விரிந்த மலர்கள், அப் பொய்கையைச் சுற்றிச் செழித்துத் தழைத்த மரங்கள், இந்த இயற்கையழகை யனுபவிக்க இரண்டு சுந்தர புருடர்கள், இவ்விதமான கற்பனை உலகத்தை நமது கண் முன்னர் நிறுத்துகின்றது இந்தச் சுலோகம்.

இப் பொய்கை மலைகளின் மத்தியில் அமைந்துள்ளது. அடர்ந்த காடாற் சூழப்பட்டுள்ளது. அக் காடுகளிலிருந்து யானைக் கூட்டங்கள் வந்து இத்தடாகத்தில் மூழ்கி விளையாடும் காட்சியை இராமன் இலக்குவனுக்குக் காட்டி இன்புறுகிறான்:-

வித்ராஸ்யகாரண்டவசக்ரவாகான்
மகாரவைர் பிங்கடா கஜேந்த்ரா:
ஸாஸ்ஸூ பத்தாம்புஜ
பூஷணேஷூ
விக்ஷோப்ய விக்ஷோப்ய
ஜலம்பிபந்தி

'மதம் பொழியும் அரச யானைகள் தங்களது கர்ஜனையினால் நீர்க்காகம் சக்கரவாகம் முதலிய பறவைகளைப் பயமுறுத்திக்கொண்டு தாமரை மலர்களால் அழகுற்றிருக்கும் பொய்கைகளில் நீரைக் கலக்கிக் கலக்கிக் குடிக்கின்றன.'

இச் சுலோகங்களின் பொருளை மனத்திற்றேக்கி, பம்பைப் பொய்கையின் தோற்றத்தை இச் செய்யுளில் வருணிக்கிறார்:-

'தேன்படி மலரது
செங்கண் வெங்கைம்மா
தான்படி கின்றது
தெளிவு சான்றது
மீன்படி மேகமும்
படிந்து வீங்குநீர்
வான்படிந்து உலகிடைக்
கிடந்த மாண்பது'

'ஆழமும் அகலமும் உடைய இந் நீர்நிலை வண்டுகள் மொய்க்கும் மலர்களை யுடையது. கரிய மதயானைகள் படியப் பெற்றது. அப்படியிருந்தும் தெளிவு மிக்கது.

வான்மீகி தன்மை நவிற்சியாகக் கூறிய பொருளைக் கம்பரும் தொகுத்து முதலிரண்டு அடிகளாற் கூறுகிறார். பின்னிரண்டடிகளில் அப்பொய்கையின் தோற்றம் கவியின் நெஞ்சிற்கு எவ்வாறுளது என்பதை உத்ப்ரேக்ஷிக்கிறார்.

'இவ்வாறு அழகியதும் கடல்போல் விசாலமுள்ளதுமான அப் பொய்கை, மின்னல்கள் தவழும் மேகங்களால் நிறைந்த வானம் உலகிடை வந்து படிந்ததுபோல் திகழ்ந்தது' என்று கூறுகிறார்.

வான்மீகி, 'வைடூர்ய விமலோதகா' என்று கூறியதின் பொருளை 'தெளிவுசான்றது' என்று தாற்பரியார்த்தமாக விளக்கியும் புலவருக்குத் திருப்தியேற்படவில்லை. அதனால் பம்பையின் தெளிந்த தன்மையை மீண்டும் வருணிக்கிறார்:-

ஈர்ந்தநுண் பளிங்கெனத்
தெளிந்த வீர்ம்புனல்
பேர்ந்தொளிர் நவமணி
படர்ந்த பித்திகை
சேர்ந்துழிச் சேர்ந்துழி
நிறத்தைச் சேர்தலால்
ஓர்ந்துணர் வில்லவர்
உள்ள மொப்பது.

பளிங்குபோலத் தெளிந்த இப் பொய்கை நீர் எந்தப் பொருளை யடுத்ததோ அந்தப் பொருளின் நிறத்தைப்பெற்று விளங்குகிறது என்பதை ஓரழகிய உவமானத்தால் விளக்கி 'அடுத்தது காட்டும் பளிங்கு' என்றதிருக்குறளையும்எங்களுக்கு நினைப்பு மூட்டுகிறார்.

நிர்மலமான நீர்ப்பரப்புக்கு ஆகாயத்தை உவப்பது கவி மரபு. கம்பர், 'வீங்குநீர் வான் படிந் துலகிடைக்கிடந்த மாண்பது' என்று புகழ்ந்தார். வான்மீகி, சரத்கால இரவில் இப் பொய்கையின் தோற்றத்தை வருணிக்கும்போது.

ஸூப்தைக ஹம்ஸம்
குமுதைரு பேதம்
மஹா ஹ்ருதஸ்தம்
ஸலிலம் விபாதி
சரத்ப்ரஸந்நம்
பரிபூர்ண சந்த்ரம்
தாராகணா கீர்ணம்
இவ அந்தரிக்ஷம்.

'ஒப்பற்ற அன்னம் உறங்க, குமுதங்கள் மலர்ந்திருக்க விளங்கும் இப் பொய்கையின் நீர்ப்பரப்பு சரத்கால சந்திரனும் நக்ஷத்திரங்களும் நிறைந்து விளங்கும் தெளிந்த ஆகாயத்தை நிகர்க்கின்றது' என்று போற்றுகிறார்.

இந்தச் சுலோகத்தின் பொருளை மனதிற்கொண்டு கம்பர் அப் பொய்கையை இவ்வாறு வருணிக்கிறார்:-

குவான்மணித் தடந்தொறும்
பவளக் கோலிவர்
கவானர சன்னமும்
பெடையுங் காண்டலில்
தவாநெடு வானகம்
தயங்கு மீனொடும்
உவாமதி யுலப்பில
வுதித்த தொப்பது.

'முத்துக்கள் மலிந்து விளங்கும் அப் பொய்கைத் தடமெல்லாம் அரசவன்னம் பேடையுடன் காணப்படுவதால் நக்ஷத்திரங்கள் மத்தியில் சந்திரனையுடைய வானத்தின் தன்மையை இப் பொய்கை அடைகின்றது' என்று கம்பர் பாராட்டுகிறார்.

# சிவஞான கிராமணியார்

## உரிமை வேட்கை மிகுந்தவர்

தமிழ்நாட்டின் சிறந்த பேச்சாளர்களுள் ஒருவரான ம. பொ. சிவஞானகிராமணியார் அவர்கள் சென்ற திங்கட்கிழமை விமானமார்க்கமாக யாழ்ப்பாணம் வந்துசேர்ந்தார். தமிழரசு இயக்கத்தில் ஈடுபட்டு உழைக்கும் இப் பெரியாரின் கொள்கைகளைத் தமிழ்நாடு முழுவதும் ஏற்றுக்கொள்ளத் தயாராயில்லை. ஆனால் அவர் சிறந்த ஆசிரியராகவும், பேச்சாளராகவும் விளங்குகின்றார். இவ்வறிஞனைப்பற்றித் 'தொடர்பன்' தீட்டியுள்ள தொகுப்பு நூலிலிருந்து சில பகுதிகளை இங்கு அநுவதித்துள்ளோம்.

இவருடன் பிரசண்ட விகடன் துணை ஆசிரியர், அ. இளங்கோவன் அவர்களும் வந்துள்ளார். இம் மாதம் 19-ந் திகதி வரை யாழ்ப்பாணத்திலே இவர்கள் தங்கிநின்று பல சொற்பொழிவுகள் ஆற்றுவார்கள். —ப-ர்.

சில ஆண்டுகளுக்கு முன் சிவஞான கிராமணி என்றால் ஒரு சில பகுதிகளில் மட்டுந்தான் தெரியும். இன்றைய நிலை அப்படியல்ல. தமிழ்நாடு முழுவதும் விரும்பி விரும்பி அழைக்கும் பேச்சாளர்களில் ஒருவராக அவர் திகழ்கிறார். வெகு குறைந்த காலத்திற்குள் இவ்வளவு புகழ் அடைவதற்கு அவரிடமுள்ள பண்புகள் என்ன? இதனை நாம் சற்று அறிவோமானால் அவரது சிறப்பியல்புகளை நன்கு தெரிந்துகொள்ள முடியும்.

கட்சிக்காகவும், தூற்றலுக்காகவும் அஞ்சாமல் பழைய முழக்கத்தை மீண்டும் எழுப்புபவர்மீது மக்கள் இதயம் ஒன்றாமல் வேறு என் செய்யும்? எனவேதான் கிராமணியார் பேச்சுக்குப் பொதுவாக நல்ல செல்வாக்கு ஏற்பட்டுள்ளது. வேறொன்றும் அவருக்குத் துணைசெய்கின்றது:

தமிழ் நாட்டின் இன்றைய அரை விழிப்பு நிலையும், முன்னிலும் பக்குவமடைந்து மெருகு ஏறிவரும் கிராமணியாரின் பேச்சும் அவரது புகழுக்கு உரஞ்செய்கின்றன.

கிராமணியார் பேசத் தொடங்குமுன் கூட்டத்திற்கு வணக்கஞ் செலுத்திவிட்டு, மெதுவாகப் பேசத் தொடங்குவார். சில நிமிடங்களுக்குள் உரத்த குரலுடன் முழக்கமிடுவார். நடுநடுவே அவர்க்கே உரிய பல வெடிகுண்டுகளைப் போட்டுப் போட்டு மக்களின் மனதைக் கவர்ந்து விடுவார்.

இதுவரை அவர் பட்ட பாடெல்லாம், கண்டு தெரிந்த அனுபவமெல்லாம் அவரது பேச்சின் வாயிலாக வெளிவருகின்றன. அவற்றை நாம் சிறிது நேரங் கேட்டால் என்ன? கேட்போம்:

"பாட்டாளி—பஞ்சமன்—பாடுபட்டும் [illegible] உலகியில் [illegible] நிலைமையாக உன்னக் குமுறியபோதெல்லாம், அவனை வாழ வைக்கச் சர்க்காரிடமிருந்து சட்டம் புறப்படவில்லை. தனியுடைமையாரின் தயவு தோன்றவில்லை. கட்சிகளுக்கும் கருணை பிறக்கவில்லை. ஏழை துன்புற்றால், அது அவன் தலைவிதி; முன்ஜென்ம பாவம்; தெய்வத்தின் கோபம், பாட்டாளி மகன் பண்டம் வாங்கப் பணமில்லாமல் பசித்திருக்கும்போது— பருத்தி ஆடைக்குப் பரிதவித்த போது பார்த்திருந்த உலகம், இன்று படித்தவனுக்குப் பாலன்னமில்லையென்றால், பணக்காரனுக்குப் பட்டாடை இல்லையென்றால் பஞ்சமெனக் கூறிப் பரிவு காட்டுகிறது.

"உண்மையென்ன? அறிவை முதலாகக் கொண்டவன் அரசாங்கத்தை நடத்துகின்றான்; பொருளை முதலாகக் கொண்டவன் பொதுமக்களின் தலைவனாக விளங்குகின்றான். இவ்வளவு காலம் பாமரனை வாட்டிய பஞ்சம் படிப்பாளியையும் பணக்காரனையும் பதம் பார்க்கத் துணிந்துவிட்டது. ஆகவேதான், 'தலைவிதி' தன் முயற்சியாக மாறிவிட்டது. பாவம் 'பஞ்சமென'ப் பெயர் கொண்டுவிட்டது! பொல்லாத உலகம்!

"இனியேனும், 'தலைவிதி' மாய்த்து தன்முயற்சி வாழுமா? படித்தவன்—பணக்காரன் பஞ்சத்தோடு பாமரனின் வறுமையும் தொலையுமா?"

பொல்லாத உலகத்தைக் காணுந்தோறும் காணுந்தோறும் கிராமணியாரின் பாட்டாளி மனப்பான்மை, நெடுநாள் பொறுத்திருந்து தாளாமல்: திடீரென்று வெடித்துக் கொட்டியுள்ள உள்ளக் குமுறல் மேலேகாண்பவை. ஏழைக்கொரு நீதியும் படித்தவனுக்கும், பணக்காரனுக்கும் ஒரு

(தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க)

# பைம் பொழில்

— என். சுந்தரமூர்த்தி —

### கட்டளைக் கலித்துறை

முதிர்தீம் பலவி னிழிநற வாடி முசுக்கலைக
ளெதிர்தாம் பிறங்கலி னெம்மா னினிதரு ளோர்கெழுநற்
புதுமலர்த் தாமரைத் தண்டேன் புகுந்து பொலனடியார்
ததைவரா லன்பிற் றிருமலைமா குன்றத் தமிழ் வெற்பிலே.

### ஆசிரியப்பா

செறிபொழிற் சேர்ந்த கருவண் டினந்தண்
ணறுமலர்த் தாது நாளெலாம் புரண்டு
பொன் செய் குழையிற் றேன்றி
மின்றிரு மாமலை மேயநன் நாட
வெஞ்சூ ரவுணர் மீப்பகை பொருது
நஞ்சணி மிடற்றன் நளிமலர்ப் பணிந்து
மன்பராம் மணியே! யருளா ரொளியே!
யின்பாம் பயனே! யெளியே! யெளியேம்
வன்பகை யொழிக்கும் வலியே! வாழ்வே
யண்ணலே யாமு மடியேங் காவா
யென்றுமுறை யிட்ட நன்பெறு தேவர்க்
களித்தருள் செய்த வண்ணல் மகனே
சூர்முதற் றடிந்து சுரரிடர் தீர்த்த
வஞ்ஞான்று தந்த தெய்வ மடப்பிடி
தன்னையு மகிழ்ந்து தண்புனற் சாரல்
மென்குர லிசைத்து மேவுபுள் ளோப்பு
மடக்குறப் பாவை யுளக்கனு நின்று
கடக்கரும் பிறவி காத்தவட் புணர்ந்த
வொளிமா முகிலே! வுயர்ந்தோர் பொருளே!
தண்டமிழ்ச் செல்வ! தனிப்பெரு வேளள்
வண்டமிழ்க் கிரன் வளமொழிக் கிரங்கி
யொண்சுடர் வேலி னெருகுன்று பிளந்தோய்!
பலரும் புகழும் பண்பினிற் சிறந்த
புலவ ரேறே புல்லியன் மொழிக்கு
நலஞ்செய் வள்ளியோய் நாண்மலர்ப் பிணையிற்
சூடி யாடுந் தொண்டர்பல் லாயிரர்
கூடி நின்று குமரவே ணின்னை
யேத்துமா றெடுத்த
நறும்புகை கெழீஇய விருவிசும் பூர்ந்த
பொறியின் மாட்சி பொருந்திய ஊர்திகள்
முகிலிடை மறைந்து வருஉம் புள்ளெனக்
கானவர் கோட்டிக் கடிதுவிட் டென்ன
யானைகள் கையின் வாங்கி யெறிந்த
கழைநீண்ட வியன் சாரல்
மழை மாண்ட நெடுங் கோட்டிற்
பல்லோர் புகழு மல்லலந் தார்திரு
மாமலை யுறையு மகிழ்வே! யெளியேன்
கோமளக் கொழுந்தே! தாமரைப் போதே!
காமனைப் பழித்த காண்டகு முருவே!
தேமரு கடம்பிணர்த் திகழ்தண் மார்ப!
பாமணம் வீசும் பைந்தமிழ்ச் செல்வ!
ஐயிரு நாட்களா யமர்ந்தெம் முடனே
ஆட்சியே புரிந்து போதமெய்ப் பொருளைக்
காட்சி யளவையாற் காட்டிப் பின்னேர்
நாளின் விடியலில் நலமாய்ச் சென்று
மீளுவன் என்றே மிடுக்காய்ச் சென்றனை
என்னே நின்றன் எழிலுறு கருணை
கூடிப் பிரியேல் என்னுமப் பாடம்
ஓடிக் கொண்டே கற்றனை கொல்லோ?
அமர்ந்தினி திருக்கமென் அடியவ ருள்ளத்
தாமரை யீண்டு, தனித்தனி யிருக்கப்
புதுமணங் கொண்ட பொற்புடை மணமகன்
கதுமெனத் தனிமனை வாழ்வை விரும்பிப்
போவது போலப் போயதை எண்ணின்,
மன்னிப் பேணும் மனைவியர் எவரும்
இல்லை யென்றே யிங்குறை யன்பர்
சாற்றினர் இன்று, அதனால் நீயுறை
இடமும் பாறையா யிருத்தலின் மனமும்
தடமார் பாறைபோ லாயதோ வறியேன்
எங்கு நீ,யிருப்பினு மங்குநின் றெழுந்து
பொங்கி வழியும் புதுவெள் ளத்திடை
ஆடித் திளைத்து அன்பெலா மடையும்
உறுதியா முடையோம் உண்மையே யைய!
பழுதிலாப் பழமறைப் பொருளே! அடியேன்
எழுமையும் நின்னடி யிணைமல ரதுவே
தொழுமடி யேற்குந் துணையீந் தருளே.

### வெண்பா

தோய்ந்த வழுக்குத் துறுகன்மே லின்றுகீழ்ப்
பாய்ந்துமை தீர்க்கும் பனியருவி—வாய்ந்த
பெருமல நீக்கும் பெருமா னருளு
முருகமர் குன்றில் முதிர்ந்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிழக்குத் தபால் — நமது நிருபர்

# பிரயாணக் கஷ்டங்கள்

உலகின் மற்றப்பகுதிகளிலே மனிதன் வாயுவேகத்திற் பிரயாணஞ்செய்ய முயற்சி செய்துவரும் இக்காலத்தில் இங்கு மனிதன் நத்தை வேகத்திற் பிரயாணஞ்செய்ய வேண்டியிருப்பதை மிக வருத்தத்துடன் குறிப்பிட வேண்டியிருக்கிறது. உதாரணமாக மட்டக்களப்பு—திருகோணமலைப் பிரயாணத்தை எடுத்துக்கொண்டால் நாம் ஏழு துறைகளைத் தாண்டியபின் தான் திருகோணமலையை அடையலாம். ஆனல் இந்த ஏழு துறைகளின் பெருக்குவற்று *பாதை இவற்றிலேயே நமது பிரயாண வேகம் தங்கியுள்ளது. 'ஈஸ்ரேண் பஸ் கம்பெனி'யைப் பற்றிச் சென்ற வாரம் குறிப்பிடப்பட்டது. அடுத்தது நமக்கு நித்திய தொல்லையளிக்கும் இலங்கை அரசினர் புகையிரதம். இது ஒழுங்காக நேரத்துக்கு வந்து சேர்வது என்பது நடவாத காரியம். இங்குள்ள நோயாளிகளையாவது சௌகரியமாகக் கொண்டுசெல்ல 2-ம் வகுப்பிற் படுக்கை வசதிகூட இல்லை. இப்பகுதிக்கு வரும் புகையிரதங்களோ இலங்கையில் உள்ளவற்றில் பழையவை. காடையர் தொல்லை இதைவிட மேல். பிரவேசச் சீட்டு இல்லாமல் நுழையும் இத்தகையோர் பிரயாணிகளை மிகவும் தொல்லைப்படுத்துகின்றனர்.

இப்படியான நேரத்தில் இதனையிட்டு விசாரிக்க ஒரு உத்தியோகஸ்தர்களையும் காண முடியாது. அநேகமாக எல்லாரும் 1-ம் வகுப்பில் கும்பகர்ணப் படலம் வாசிப்பார்கள். இவையெல்லாவற்றையும் விட அதி பயங்கரமானது மட்டக்களப்பு வாவியின் இரு மருங்கிலுமுள்ள துறைகள். பண்டைக்காலத்தில் உபயோகிக்கப்பட்ட அதே பழைய தோணிகளும், வள்ளங்களும், பாதைகளுமே இங்கு உபயோகிக்கப்படுகின்றன. இவையெல்லாம் அரசினர் பரிபாலிக்கும் துறைகளாயினும் எவ்வித விசேஷ மாறுதலையும் பெறவில்லை. மட்டக்களப்புப் பட்டணத்தின் இரண்டு மைல் தூரத்திலுள்ள 'வலைகட்டிறவையும்' 'வவுணதீவையும்' இணைக்கும் துறை, சுமார் ஒரு மைல் நீளமானது. அதைக் கூட ஓட்டை வள்ளத்திற் கடக்க வேண்டியும் ஏற்படுகிறது. இத்துடன் கச்சான் காற்று வீச ஆரம்பித்துவிட்டால் உயிரைக் கடவுளிடம் கொடுத்துவிட்டுப் பிரயாணஞ் செய்ய வேண்டியதுதான்! தவிர, ஏழை விவசாயியின் சக்தி வீணே விரயமாகிறது. இத்துறைக்கு வெகு சமீபத்திலுள்ள மிகக் குறுகிய துறையாகிய மாந்தீவுக்கு நீராவி வள்ளம் ஓடுகின்றது. இதனைக் கவனிக்குமிடத்து அரசாங்கம் சனங்களுக்காக அல்ல, சில தனி அந்தஸ்துப் படைத்தவர்களுக்காகத்தான் நடப்பதாகக் கருதவேண்டியிருக்கிறது. 'இப்பகுதி மக்களின் பெருந் தொல்லையைப் போக்கப் பிரதிநிதிகள் சபை அங்கத்தவர் என்ன செய்யப் போகிறார் எனப்' பொறுத்திருந்து பார்ப்போம். 'பஸ் கம்பெனி'களின் தொல்லையைப் போக்குவதாயின் அரசாங்கம் சாவகச்சேரிப் பிரதிநிதியின் யோசனைப்படி நடக்கவேண்டும். அதாவது ஒழுங்கீனமாக நடாத்தும் 'பஸ்கம்பெனி'யின் வீதிகளைக் கூட்டுறவுப் போக்குவரத்துச் சங்கத்திடம் ஒப்படைத்துவிட வேண்டும். புகையிரதநிலை திருந்துவதாயின் புகையிரதப்பகுதியின் பிரதம அதிகாரி இரகசியமாக மாதம் மும்முறை மட்டக்களப்பு வண்டியிற் பிரயாணஞ்செய்து கஷ்டங்களை உணரவேண்டும். இவ்வித தொல்லைகளை நேரே அனுபவித்தறியாத இரத்தினம் போன்றவர்களின் அறிக்கைகளினல் எதுவித நன்மையும் ஏற்படாது.

* துறையைத் தாண்ட உபயோகிக்கும் ஒருவகை ஓடம்.

### பாடும் மீன்

உலகில் இரண்டு இடங்களிற்றான் பாடும் மீன்கள் காணப்படுகின்றன. அவற்றுள் ஒன்று மட்டக்களப்பு வாவியாகும். இம் மீன்கள் வாவியிலிருந்தே இன்னிசையைக் கிளப்புகின்றன. ஆனல் சென்ற சில தினங்களாக பாடும் மீன் ஒன்று வாவிமீது ஓடி உலாவி வருகின்றது. இது தான் மட்டக்களப்புப் போக்குவரத்து ஐக்கிய சங்கத்தாரின் நீராவி வள்ளம். இது மட்டக்களப்பிலிருந்து கல்முனைவரை பிரயாணஞ் செய்கின்றது. இதனல் வாவியின் மேற்குக்கரையோரமாகவுள்ள கிராமங்களுக்குப் பிரயாணம் சற்று இலகுவாகிவிட்டது. வாவியைக் கடந்து 'பஸ்' வண்டிக்காக மணித்தியாலக் கணக்கிற் காத்திருக்க வேண்டிய அவசியமில்லையல்லவா?

### திறவாத தெரு

மட்டக்களப்பு இலங்கையின் தானியக் களஞ்சியம் எனப் பாராட்டப்படுகின்றது. ஆனல் மட்டக்களப்பின் தானியக் களஞ்சியங்களாக விருப்பது வாவியின் மேற்குக்கரையிலுள்ள கிராமங்களேயாகும். ஆனல் இந்தக் கிராமங்கள் திறமான போக்கு வரத்து வசதிகள் இல்லாமையால் மிகவும் பிற்போக்கான நிலையில் இருக்கின்றன. இப்பகுதியினூடே செல்லும் செப்பனிடப்படாத பாதையொன்று சம்பாந்துறையில் ஆரம்பமாகி மண்டூர், போரைதீவு, பழுகாமம், அம்பிளாந்துறை, கொக்கட்டுச்சோலை என்பவற்றினூடே 'கன்னன்குடா'வரை செல்கின்றது. இவ்வீதி பனிரங்கவேலைப் பகுதியாரால் செப்பனிடப்பட்டு ஒரு வாவதியைக் கன்னன்குடாவிற் கட்டுவதன்மூலம் பட்டணத்துடன் இணைக்கப்படுமானல் இப்பகுதி மக்களின் கல்வி, சுகாதார, பொருளாதார நிலைமை பெரிது முன்னேறிவிடும்.

### பரிசளிப்பு விழா

மத்திய கல்லூரிப் பரிசளிப்பு விழாவுக்குப் பல்கலைக் கழகத்துத் தாவர சாஸ்திரப் பேராசிரியர் டொக்டர் நியூமன் அவர்கள் தலைமை வகித்தார்கள். கல்லூரி உதவி அதிபர் தமது அறிக்கையில் தொழிற் கல்வியின் அவசியத்தை வற்புறுத்தினர். அத்துடன் உபகரண நன்கொடை போதாது என்ற பழங்கதையைப் பேசியதுடன், "அரசாங்க மத்திய கல்லூரிகளிலே திறமையான ஆசிரியர்கள் வீணாக்கப்படுவதோடு, பணத்தையும் விரையஞ் செய்வதாக முதலைக்கண்ணீர் வடித்தார். இவருக்கு ஏன் அரசாங்கப் பாடசாலைகளில் இவ்வளவு அக்கறையோ தெரியவில்லை?

### ஸ்ரீ சுந்தரலிங்கம் வருகை

பேராசிரியர் சுந்தரலிங்கம் அவர்களுக்கு எப்போதும் மதிப்புத்தான். இதற்குக் காரணம அவரது மேதையும், நேர்மையும், துணிபுமேயாகும். அவர் மட்டளப்பு மக்களின் அழைப்புக் கிணங்கி இலங்கையின் இன்றைய அரசியல் நிலை என்னும் விஷயம் பற்றிப் பேச வருகிறார். இப்பேச்சுடன் நிறுத்தி விடாது இப்பகுதியிற் பல்வேறு தேவைகளை இதுபோன்று பல கூட்டங்கள்மூலம் அரசாங்கத்துக்கு எடுத்துக் காட்டுவார்களாயின் அது பெரும் பயனளிக்கும்.

### சிங்கக்கொடி வழக்கு

இலங்கையின் முதல் சுதந்திர விழாவிலன்று சிங்கக்கொடி காரணமாகப் பொத்துவில் என்ற கிராமத்திலுள்ள சிங்களர்களுக்கும் முஸ்லீம்களுக்குமிடையிற் கலகமேற்பட்டதும் சிங்களர் ஒருவர் படுகாயமடைந்ததும் பழங்கதை. இக்குற்றத்தைச் செய்ததற்காக முஸ்லீம்கள் பலர் குற்றஞ்சாட்டப்பட்டனர். நீதிபதி, அத்தனை பேரையும் குற்றவாளிகளல்ல என்று தீர்ப்பளித்தார். சட்டத்துறைத் தலைவர் (அற்றேணி ஜெனறல்) இத் தீர்ப்பை ஆட்சேபித்து 'அப்பீல்' செய்துகொண்டதின் காரணமாக 19 முஸ்லீம்கள்மீது மீண்டுமொரு விசாரணை நடாத்தும்படி உத்தரவிடப்பட்டுள்ளது. சிங்கக்கொடியால் இப்படிப் பல தொல்லைகளே ஏற்பட்டு வருகின்றன.

### விடுதலை கால வகுப்புகள்

விடுதலை கிடைத்தாலும் ஆசிரியர்கள் ஆறுதலாகக் காலங்கழிக்க வசதியில்லை. ஏனெனில் இந்தத் தவணையில் ஆசிரியர்களுக்கு ஒரு தேகப் பயிற்சி வகுப்பொன்று நடத்த ஒழுங்குகள் செய்யப்படுகின்றன. இவ்வகுப்புகள் இம் மாதம் 18-ந் திகதி முதல் 25-ந் திகதிவரை நடக்கும். பல தேகப்பயிற்சி விற்பன்னர்கள் தீவின் பலபாகங்களிலும் இருந்து வந்து பயிற்றுவார்கள். இவ்வகுப்புகள் அரசினர் கலாசாலையிலும், அரசடியிலும் நடாத்தப்படுமாம். இவ் வகுப்புகளில் ஆண்களோடு பெண்களும் பங்குபற்றிக்கொள்வார்களாம்.

## சிவஞான கிராமணியார்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

நீதியும் இருக்கக்கூடாது என்று வற்புறுத்திக் காட்டுவதில் தான் எவ்வளவு உண்மை பொதிந்திருக்கிறது!

நம்நாட்டின் பெரும்பான்மை மக்களின் உண்மை நிலையை அவர் எடுத்துக்காட்டிப் பேசியுள்ளதைப் படிக்கும்போது அவரது அடிவயிற்றிலிருந்து கொதித்தெழுந்து வரும் கடுஞ் சொற்களை நாம் காணுமல் இருக்க முடியாது. இன்சொல்லால் கெஞ்சியும், விம்மியும் பலனில்லை என்றால், பாட்டாளியுள்ளம் ஆத்திரங் கொள்ளாமல் வேறு அமைதியாகவா இருக்க முடியும்?

'என்ன' என்று அழுத்தி நிறுத்திச் சொல்லும்போது அவரை நாம் பார்க்கவேண்டும். கண்கள் சினப் பொறிகளைச் சிந்தும். வளர்ந்து மடிந்துள்ள மீசை துடிதுடித்து நிமிரும். கைகள் அழுந்தும். நன்றாகச் சொல்லவேண்டுமானல் அன்று செய்வது இன்னதென்று அறியாது வெகுண்டு எழுந்து காட்சியளிப்பார்!

தன் கட்சிக் கருத்துக்கும், தன் கருத்துக்கும் அல்லது இன்றைய பொது மனப்போக்கிற்கு ஊனம் ஏற்படாத வகையில் எவ்வளவு அளந்து பேசக்கூடுமோ அந்த அளவிற்குக் கிராமணியார் மிகத் திறம்படப் பேசி வருகிறார்.

அவரது பேச்சிலே அவ்வப்போது ஏற்படுகின்ற அரசியல் நடைமுறைகளையும் உரிமைக்கும் உயிர்க்கும் போராடுகின்ற பாட்டாளியின் துயரக் குமுறல்களையும் நம்மால் கேட்க முடிகிறது. உரிமை வேட்கை மிகுந்துள்ளதால் அவர் காங்கிரஸ்காரர். பொருளாதாரப் புரட்சியை நாடுவதால் அவர் ஒரு பொது உடைமைக்காரர். புடம் விட்டுச் செல்லும் சமுதாயக் கொடுமையைப் போக்க மெல்ல மெல்ல அடியெடுத்து வைப்பதால் சுய மரியாதைக்காரர். உடனடியாக இந்நாட்டில் ஏற்படக்கூடிய முக்கூட்டு மாறுதல்களுக்கும் தன்னைப் பக்குவப்படுத்திக்கொண்டு வரும் தொண்டராகக் கிராமணியார் இருக்கிறார்.


# லக்ஸ் டாய்லட் சோப்பின்

## புதிய பரிமளத்தைப்பற்றி அழகி பத்மினி சொல்வதைக்கேளுங்கள்!




சினிமா நட்சத்திரங்களின் அழகு தரும் சோப்

LTS. 213-132 TM


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டுறவு

II

அ. அருளம்பலம்

இக் காலத்தில் வாழ்க்கையின் பல்வேறு துறைகளிலும் கூட்டுறவு முறைகள் கையாளப் பட்டு வருகின்றன. பண்டகசாலைகளும், நாணய சங்கங்களும் மக்களுக்கு எவ்வளவு நன்மை பயக்கின்றனவோ அதேபோலக் கூட்டுறவுச் சிக்கனச் சங்கங்களும், நல்வாழ்வுச் சங்கங்களும், போக்கு வரவுச் சங்கங்களும், வீடு கட்டும் சங்கங்களும், மீன் பிடிக்கும் சங்கங்களும், நெசவாளிகளின் சங்கங்களும், விமாச் செய்யும் சங்கங்களும், விளை பொருள் உற்பத்தி விற்பனவுச் சங்கங்களும் இன்னோரன்ன பிறவும் வெவ்வேறு துறைகளில் நாட்டின் நல்வாழ்வு அம்சங்களாகத் திகழ்கின்றன. இலங்கை ஓர்விவசாய நாடாக அமைந்து இருப்பதாற் கூட்டுறவு விளைபொருள் உற்பத்தி விற்பனவுச் சங்கங்கள் இந் நாட்டிற்கு விசேஷ நன்மை பயக்கக் கூடியனவாய் இருக்கின்றன. ஆதலால், இச் சங்கங்களைப் பற்றிச் சிறிது ஆராய்வோம்.

உலகத்திலே விளைபொருள் உற்பத்தி விற்பனவுச் சங்கங்களிற் கீர்த்தி பெற்ற தேசங்கள் 'டென்மார்க்' 'சுவீடின்' 'சுவிற்செலாந்து' என்பனவாகும். இத் தேசங்களிற் கூட்டுறவுப் பாற் பண்ணைகளும் அநேகம் உண்டு. இங்குள்ள மக்கள் தண்ணீருக்குப் பதிலாகப் பாலைப் பருகுகின்றனர் என்று ஓர் அறிஞர் கூறுகின்றார். ஆதலாற் கூட்டுறவு முறையை நாமும் நன்கு கையாண்டால் எமக்குத் தேவைப்பட்ட உணவை நாமும் இலகுவாகப் பெறலாம் என்பது நிச்சயம். கமக்காரனுக்கு அத்தியாவசியமாய் வேண்டப்படுவது பூமி. நிலத்தைத் திருத்தவும், பசளை இடவும், விளைபொருளை உண்டாக்கவும் பணம் தேவை. பணத்தைப் பெறுவதற்குக் கூட்டுறவு நாணய சங்கங்களும், மத்திய வங்கிகளும் உதவியாயிருக்கின்றன. இவை எவ்விதம் கடன் கொடுக்கின்றன என்பதையும், இவற்றால் உண்டாகும் நன்மைகளைப் பற்றியும் முன் அறிந்தோம். விளைபொருள் உற்பத்தி விற்பனவுச் சங்கங்கள் தமது அங்கத்தினருக்குத் தேவையான பணத்தை நீண்ட காலத்திற்கு மத்திய வங்கிகளிற் பெறுகின்றன. அங்கத்தினர் பணத்தைப் பெற்றுப் பொருட்களை உற்பத்தியாக்கித் தாம் விளைவித்த பண்டங்களைச் சங்கத்திற்கு விற்கின்றனர். சங்கம் அங்கத்தினருக்குத் தேவையான பணத்தைக் கொடுத்து மிகுதியை அவன் கொடுக்க வேண்டிய கடனில் வரவு வைக்கின்றது. இப்படிச் செய்வதனால் அங்கத்தினருக்குக் கஷ்டம் ஏற்படுவதில்லை. அன்றியும் விளைவித்த பொருட்களை விற்பதற்குச் சந்தையைத் தேடி அலைந்து தரகர்மாருடைய வலையில் அகப்பட்டுப் பொருளை இழக்காமல் அங்கத்தவன் தப்பிக் கொள்கின்றான். மேலும் உற்பத்தி செய்த பொருளை வைத்துக்காப்பாற்ற முடியாத அங்கத்தவனுக்கு சங்கம் பேருதவி புரிந்து பொருட்களைப் பெரிய கிட்டங்கிகளிற் பாதுகாத்து வைத்துத் தக்க விலை ஏற்படும் காலத்தில் விற்று வருவாயை அங்கத்தவனுக்குக் கொடுக்கின்றது.

கூட்டுறவு மூலம் விவசாயம் செய்வதனாற் பல நன்மைகள் உண்டு. ஐரோப்பிய நாடுகளிலும் இந்தியாவில் பாஞ்சாலத்திலும் நிலங்களை ஒன்று சேர்க்கும் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் விவசாயிகள் தமது சிறு துண்டுகளாயுள்ள செய்கை நிலங்களை ஒன்று சேர்த்துப் பெரும் பிரிவுகளாக்கி அநேக நன்மைகள் அடைகின்றனர். உதாரணமாக இப் பெரும் பிரிவுகள் வேலியடைத்துப் பயிரைப் பாதுகாக்கவும், நீர்ப்பாசன வசதியுண்டாக்கவும், சாஸ்திர சம்பந்தமான கிருஷிக முறைகளைப் பிரயோகிக்கவும், இயந்திரங்கள் மூலம் காணியை உழுது, பசளையிட்டு, விதைத்து, களை பிடுங்கி, பயிருக்குவரும் நோய்களைத் தடுத்து, அறுவடை செய்யவும் உதவுகின்றன. காணியை ஒன்று சேர்த்துத் திருந்திய கமச் செய்கையில் ஈடுபடும் ஓர் கூட்டுறவுச் சங்கம் பின்வரும் விஷயங்களைக் கையாளலாம். முதலாவதாக நிலங்களை எல்லாம் ஒரே இடத்திற் பெறுவதற்காக முயற்சி செய்து அங்கத்தினருக்கிடையே ஏதாவது பிணக்குகள் ஏற்படின் அவற்றைப் பொதுமனிதரின் ஆலோசனைக்கு விட்டு அவர்களுடைய தீர்ப்பை அங்கீகரித்தல். இரண்டாவதாக அங்கத்தவர்கள் திருந்திய கிருஷிக முறைகளைக் கையாண்டு நல்ல விதையும், பசளையும் திருந்திய கருவிகளும் பெற உதவிசெய்தல். மூன்றாவது விளைவித்த பொருட்களைக் கூட்டுறவு விற்பனவுச் சங்கத்திற்குக் கொடுத்து அங்கத்தினருக்குத் தகுந்த விலைமானம் கொடுத்தல். இம்முறைகளைக் கையாண்டு 'டென்மாக்' தேசம் தனக்குத் தேவைப்பட்ட பொருட்களை எல்லாம் உள்நாட்டிலேயே உண்டாக்கியதோடமையாது அயல் நாடுகளுக்கும் இப்பொருட்களை ஏராளமாக ஏற்றுமதி செய்யத்தக்கதாக இருக்கின்றது.

**மக்கள் ஒன்றுபட்டால்** யாதுதான் செய்யமுடியாது? விசேஷமாக வறிய கமக்காரருக்கும் சிறு ஊதியம் பெறும் தொழிலாளருக்கும் கூட்டுறவு இயக்கம் அதிக பலனைக் கொடுக்கும் ஓர் ஒப்பற்ற மார்க்கமாக இருக்கின்றது. இவ்வியக்கத்தில் ஏழைகள் தமக்கு வேண்டும் பணத்தைக் குறைந்த வட்டிக்குப் பெற்றுக் கமம் செய்து சீவியம் நடாத்த முடிகின்றது. அல்லாமலும் இயக்கத்திற் சேர்ந்தவர்கள் ஆட்சிமுறையில் நல்ல பயிற்சி பெறுகின்றனர். மக்கள் சிக்கன வாழ்வு நடாத்தவும் தேசத்தின் பொருளாதார நிலையை உயர்த்தவும் இவ்வியக்கம் பேருதவி புரிகின்றது. தற்காலத்தில் முதலாளி தொழிலாளிகளுக்கிடையே உண்டாகும் பூசல்களை ஒழித்து எல்லாரும் சகோதரர்களாக இன்புற்றிருக்க வழிகாட்டும் இயக்கம் கூட்டுறவு இயக்கமே. இது முதலாளித்துவத்திற்கும் சம உடைமைக்கும் இடையே உள்ள நடுநெறி. இவ்விரண்டு கொள்கைகளிலும் உள்ள தீயனவற்றை விலக்கி நன்மையானவற்றை இவ் இயக்கம் தன்னுள் அடக்கியுள்ளது. **வலோற்காரமில்லாமல்** நாளடைவில் சகோதரத்துவத்தை வளர்த்து பொருளைப் பிரித்து அனைவருக்கும் பங்கிடு செய்யும் மார்க்கம் கூட்டுறவு. புது சகாப்தத்திலும் எக்காலத்திலும் மக்கள் வேண்டுவதும் இதுவே.

"ஒன்று பட்டால்
உண்டு வாழ்வே—நம்மில்
ஒற்றுமை நீங்கில்
அனைவர்க்கும் தாழ்வே!
நன்றிது தேர்ந்திடல்
வேண்டும்—இந்த
ஞானம் வந்தாற் பின்
நமக்கெது வேண்டும்"

# உலகப் பாதுகாப்பு?

## உலக விவகாரம்

**சரித்திரப் பிரசித்தம்** வாய்ந்த அத்லாந்திக் பாதுகாப்பு ஒப்பந்தம் உவாஷிங்டனிற் சென்ற 4ந் திகதி கைச்சாத்திடப்பெற்றது. இது ஐரோப்பாவையும் அமெரிக்காவையும் இணைக்கும் ஒரு உடன்படிக்கையாகும். ருஷியாவின் ஆதிக்கம் உலகிடைப்பரவாது தடைசெய்வதே இந்த ஒப்பந்தத்தின் முக்கியமான நோக்கம். உலகம் முழுவதையும் பாதிக்கக்கூடிய இவ் வொப்பந்தம் மூன்றுவது உலக யுத்தத்தைக் கிளப்பிவிடக்கூடுமெனக் கருதுபவருமுளர்.

ஹிட்லர் எவ்வாறு போலந்துக்கு மேற்கேயுள்ள ஐரோப்பிய நாடுகளைத் தன் ஆட்சிக்குட்புகுத்தினாரோ, அவ்வாறே ஜேர்மனிக்குக் கிழக்கேயுள்ள ஐரோப்பிய நாடுகளை ருஷியா தனது ஆதிக்கத்திற் கொண்டு வருகின்றது. இது இப்படியே தொடர்ந்து நடைபெற்று ருஷியாவின் கை அப்பகுதிகளில் ஓங்குமாயின் அமெரிக்காபாடு மிக மோசமாகிக் கொள்ளும். முன்கூடியே இந்த அபாயத்தைத் தடுத்துக் கொள்வதற்காக இன்று அத்லாந்திக் ஒப்பந்தம் எழுந்துள்ளது.

### பரஸ்பர பாதுகாப்பு

அத்லாந்திக் உடன்படிக்கையுடன் சம்பந்தப்பட்ட பன்னிரண்டு தேசங்களின் உள்நாட்டுக் கட்டுக்கோப்புக்கோ, அன்றேல் அரசியற் சுதந்திரத்துக்கோ உலகில் ஆபத்து ஏற்படுமாயின் குறித்த பன்னிரண்டு தேசங்களும் (பெல்ஜியம், கனடா, டென்மாக், பிரான்ஸ், இத்தாலி, ஐஸ்லாந்து, நோவே, போத்துக்கல், பிரிட்டன், அமெரிக்கா) உடனே கலந்தாலோசித்து ஆகவேண்டிய நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென ஒப்பந்தம் வற்புறுத்துகின்றது.

பொருளாதாரத் துறையிலும் சச்சரவுகள் ஏற்படாத வண்ணம் குறித்த நாடுகள் ஒத்துழைத்துக் கொள்ள வேண்டும்.

அமெரிக்க அரசாங்க மந்திரி டீன் அக்கீஸன் அத்லாந்திக் ஒப்பந்தம் ஒரு புனிதமான காரியமெனக் கூறி, ஆக்கிரமிப்பில் இறங்குபவர்களுக்கு இந்த ஒப்பந்தம் ஓர் எச்சரிக்கையாகும்; யார் தாக்குதல்களை ஆரம்பிக்கின்றனரோ அவர்களுக்கு அழிவுதான் எனவும் எச்சரிக்கையிட்டார்.

பிரிட்டனின் அயல் நாட்டு மந்திரி பெவின் அவர்கள் இவ்வுடன்படிக்கைக்குப் புகழ்மாலை சூட்டிப் பெரிமிதமடைகின்றார். சிதறிக்கிடந்த ஜனநாயகத்தின் சக்திகள் அனைத்தும் இதன் மூலம் ஒன்று திரண்டு உருவாகிக் கொண்டதென, அவர் ஆர்ப்பரிக்கின்றார்.

### இன்பவாழ்வுக்கு அரண்

**அமெரிக்க** ஜனாதிபதி அடையும் மகிழ்ச்சி சொல்லுந்தரமன்று. ஆக்கிரமிப்பு என்ற பீதியின்றி உலகமக்கள் இன்பமான வாழ்வை நிர்மாணிப்பதற்கு இவ் வொப்பந்தம் அரண்போல அமைந்து பாதுகாப்பு அளிக்கும் சக்தி படைத்ததென அவர் இறும்பூதெய்துகின்றார்.

இத்தனைக்கும் சோவியத்து ருஷியா என்ன கூறுகின்றதென்பதையும் கவனித்துக் கொள்ள வேண்டும். அமெரிக்காவிலும், பிரிட்டனிலும் உள்ள ஆளும் வர்க்கத்தினர் ஆக்கிரமிப்புக் கொள்கையைக் கைக்கொள்ளுவதற்காக அமைந்துள்ள கருவியே அத்லாந்திக் ஒப்பந்தமாகும். இது மற்றுமோர் யுத்தத்துக்கான பூர்வாங்க ஏற்பாடாகும்.

### மார்ஷல் உதவி

அத்லாந்திக் ஒப்பந்தம் கைச்சாத்திடப் பெற்ற அதே தினத்தில் மார்ஷல் திட்டத்துக்கும் ஓராண்டு நிறைவேறுகின்றது. சென்ற வருஷம் ஏப்பிரல் மாதம் 3-ந்திகதி மார்ஷல் திட்டத்தை அமெரிக்க அரசாங்கம் நிறைவேற்றி வைத்தது. இத்திட்டத்தின்படி அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகளுக்குப் பொருளாதார உதவி வழங்கி வருகின்றது. இனி, அந் நாடுகளின் குடியேற்ற நாடுகளுக்கும் அந்த உதவி கிடைக்கும்.

ஐரோப்பாவுக்கு அமெரிக்கா அளிக்கும் குறித்த மார்ஷல் திட்ட உதவியை மேலும் ஒரு வருஷம் நீடிக்க வேண்டுமென்ற மசோதா பற்றிய விவாதம் அமெரிக்காவின் மேற் சபையில் நடைபெற்றது. பொருளாதார உதவி அளிக்கும் இத்திட்டத்தில் ருஷியா சேர்ந்து கொள்ளவில்லை. அத்துடன் போலந்து செக்கோசிலேவியா போன்ற நாடுகளையும் சேரவிடாது தடுத்தது.


இத் திட்டத்தின்படி பிரதி வருடமும் 500-கோடி டொலர் மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கு உதவப்படுகின்றது.

### சமாதானப் பேச்சு

**யாங்ஸி** நதிதீரத்தில் நடை பெற்றுவரும் போர் சென்ற செவ்வாய்க்கிழமை நிறுத்தப் படுமென்ற செய்தி எட்டியது. ஆறு பேரைக் கொண்ட சீனத்து அரசாங்கக் கோஷ்டி ஒன்று பீப்பிங் நகரில் உழைக்கின்றது. பூரண சரணாகதியே சமாதானத்துக்கு வழியெனக் கொம்யூனிஸ்டுகள் கூறுகின்றனர். தற்போது கொம்யூனிஸ்ட் படைகள் நாங்கிங், ஷாங்ஹாய் ஆகிய முக்கிய இடங்களை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கின்றன.

கொம்யூனிஸ்டுகளின் துரிதமான முன்னேற்றம் சீனத்து அரசாங்கத்துக்கு மிகுந்த வருத்தத்தை யூட்டி வருகின்றது.

(தொடர்ச்சி 8-ம் பக்கம் பார்க்க)




ஒவ்வொரு தாயும் வுட்வார்ட்ஸ் கிரைப் வாடரின் சிறந்த குணத்தை அறிவாள். அது குழந்தைகளைக் காப்பாற்றுகிறது

WOODWARD'S
GRIPE WATER
*keeps baby well*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறிவிப்பு

தமிழ் வருடப்பிறப்பை முன்னிட்டு அடுத்தவாரத்து ஈழகேசரி (17.4.49) இதழ் வெளிவரமாட்டாது.

அதிபர்
ஈழகேசரி.


# ஈழகேசரி

கன்னுகம், சர்வதாரி, பங். உ அ
— காந்தி ஆண்டு 80 —


## வைத்தியசாலைகளின் பரிபாலனம்

இலங்கையில் அரசினர் வைத்தியசாலைகளின் தொகை கூடிக்கொண்டு வருகின்றதேயன்றி, அவைகளின் பரிபாலனம் ஏற்ற முறையில் திருப்தியாக நடத்தப்படுவதைக் காணேம். சிகிச்சையின் பொருட்டு வைத்தியசாலைகட்குச் செல்லும் நோயாளர் பலவித கஷ்டங்கட்கு ஆளாவதாகக் கூறப்படும் முறைப்பாடு நீடித்தவோர் குறையாகும். அரசினர் இக்குறைகளை நீக்க நடபடிக்கைகளைக் கையாள்வதாகக் காணேம். வைத்தியப் பகுதியின் பொருட்டுச் செலவாகும் அரசாங்கப் பணமோ இம்மாத்திரமன்று. ஏற்படும் இப்பாரிய செலவுக் கேற்ப நன்மை வந்து சேராதுபோவது எவ்வளவு ஆக்கமான விஷயம்? இவ்வாறு நிகழ்ந்துவரும் குறைகட்கும் சீர்கேடுகட்கும் பல காரணங்கள் எடுத்துக் காட்டப்படுகின்றன. ஆனல் இவைகள் நீக்கப்படக் கூடாதனவன்று. இப்பகுதியின் பரிபாலனத்தில் ஈடுபட்டோர் தமது கடமையை மனச் சாட்சிக்கு விரோதமின்றிச் செய்யின் கருதிய அனுகூலங்கள் கிடையாமற் போகுமா?

போதிய வைத்தியர்கள் இலங்கையில் இல்லாதிருப்பதே காரணமென எடுத்துக் காட்டப்படுகின்றது. இங்கிலாந்து முதலிய மேலைத்தேச நாடுகளில் ஈராயிரம் பேருக்கு ஒரு வைத்தியர் உளதாக நாம் அறிகின்ருேம். ஆனல் இலங்கையில், பதினயிரம் பேருக்கு ஒரு வைத்தியரே இப்போதைய முறையில் உளராம். அப்படியாயின் வேறு நாடுகளிலிருந்தாவது வைத்தியர்களைத் தருவித்து இக்குறையை ஓரளவுக்கு நிவிர்த்தி செய்யலாமே. அதற்கிடையில் இலங்கையில் வைத்தியங் கற்கும் மாணவரை அதிகரிக்க வழிகாண வேண்டும். வைத்தியப் பகுதியினர் இந்த அவசியமான விஷயத்தில் ஊக்கமின்றி வாளாவிருப்பது பெரிதுங் கண்டிக்கப்படவேண்டிய விஷயம். தேசத்தின் ஆரோக்கிய நிலையிலேயே நாட்டின் முற்போக்குப் பெரும்பான்மையுந் தங்கியுளது. ஆரோக்கியத்தை நன்னிலைப்படுத்திக் கொண்டுதான் மற்றைய துறைகளில் விருத்தி ஏற்படச் செய்ய வேண்டும். இதை நமது அரசினர் அறியாதவரல்லர்.

இது ஒருபுறமாக, அரசாங்க வைத்தியசாலைகளிற் கடமையாற்றும் வைத்தியர்கள் தமது கடமைகளைச் சரிவரச் செய்கின்ருரா என்பது ஆராயுந் தரத்து. சம்பளத்துக்காக வேலை செய்பவராகவே அநேகர் காணப்படுகின்றனர். தாம் கையேற்ற தொண்டினை மன விருப்பத்துடன் செய்பவர் மிகச்சிலரே. நோயாளர்களை மிருகங்களாகக் கருதும் வைத்தியர்களும் சிலருளர். அன்புடனும் ஆதரவுடனும் செய்யப்பட வேண்டிய வைத்தியச் சிகிச்சை, சில வைத்தியசாலைகளில் நாய் கடி பூனை கடியாக நடத்தப்படுவதும் யாவரும் அறிந்தவிஷயம். வைத்தியசாலையும் அதன் விருத்தியும் முற்று முழுதாக வைத்தியர்களையே பொறுத்தனவாகும். ஏற்ற தகுதியும் நற்குணமும் ஆதரவும் பொறுமையும் வாய்ந்த வைத்தியர்களால் நடத்தப்படும் வைத்தியசாலைகள் பொதுவாக விருத்தியடைவதும், இவைகட்கு நேர் விரோதமானேர்களால் நடத்தப்படும் வைத்தியசாலைகள் குன்றி வருவதையும் நோக்குமிடத்து இதன் உண்மை விளங்கும். எனவே, வைத்தியசாலைகளின் விருத்தி வைத்தியரையே எப்போதும் சார்ந்துசெல்லும் என்பதை அரசினர் உணரவேண்டும். அதற்கேற்பச் சிறந்த இலக்கணங்களும் தகுதியுமுடையாரையே இந்தப் பதவிக்குத் தெரிந்து பயிற்றுவது சாலவும் சிறந்த முறையாகும்.

அரசாங்க வைத்தியசாலைகள் ஏற்றமுறையில் நடத்தப்படாமையாற்ருன் கொழும்பிலும் மற்றைய பிரதான இடங்களிலும் நோயாளர் அதிகமாகச் சாதாரண வைத்தியர்களைத் தேடிச் செல்கின்றனர். இவ் வைத்தியர்கட்கு அதிக மதிப்பு இருப்பதை நாம் கண்கூடாகக் காணலாம். நினைத்த நினைத்த போதெல்லாம் தேவைக்கும் அவசியத்துக்கும் ஏற்ப இவ் வைத்தியர்களின் தொண்டு பெறக்கூடியதாயிருப்பதை எவரும் மறுக்கமாட்டார். அவசர தேவைகட்கு அரசாங்க வைத்தியர்களின் உதவியைப் பெறுவதென்பது பொதுவாக இயலாதகாரியம். தமது உயர்ந்த பதவியையும், சம்பளத்தையும் அதிகாரத்தையும் நினைத்து இறுமாப்படைந்த இவ்வரசாங்க வைத்தியர்கள் ஏழைகளின் கஷ்டத்தை உணர்வது எப்படி? பொது ஸ்தாபனங்களால் நடாத்தப்படும் சாதாரண வைத்தியசாலைகள் விருத்தியடைவதற்கும் அரசாங்க வைத்தியசாலைகள் பலவிடங்களில் மூண்டமாக விருப்பதற்கும் இதுவே காரணமாகும். அரசாங்க வைத்தியர்கட்கு வேலை அதிகரித்துளதென்பது உண்மையே. என்ருலும் இவர்கள் தமது ஒவ்வாத கோட்பாடுகளை முற்ருகக் கைவிட்டுப் புதியமுறைகளைக் கையாளவேண்டியது அவசியமாகும். அரசினரும் இக் குறைகளை நன்கு நோக்கி வேண்டிய வேண்டிய திருத்தங்கள் செய்து பொதுமக்கள் அடையுங் கஷ்டங்களை நிவிர்த்தி செய்வாராக.

---

### நூதனமல்லவே!

இலங்கையிற் கோதுமை மா உபயோகிப்போர் தொகை யுத்த காலத்தில் மிகவும் அதிகரித்துச் சென்றது யாவரும் அறிவர். நெல்லரிசி கிடையாமையாலும் கோதுமையின் விலை மிகக் குறைவாக இருந்தமையாலும் பொதுவாக ஏழைமக்கள் கோதுமையையே தமது பிரதான உணவாக யுத்தகாலத்திற் கைக்கொண்டனர். இப்பொழுது கோதுமை விலை இரண்டுமடங்காக ஏற்றப்பட்டுளது. அத்துடன் அரிசியின் விலையும் மிகவும் குறைந்துவிட்டது. இந்நிலையில் இலங்கையிற் கோதுமை இறக்குமதி குறைவடையாதுபோவது எப்படி? கோதுமை அதிகமாகச் சாகுபடி செய்யப்படும் அவுஸ்திரேலியா, கனடா முதலிய நாட்டினர் இந்த அரிய சந்தர்ப்பத்தில் நினைத்தபடி விரும்பியலாபத்தை அடையலாமெனக் கருதுகின்றனர். தற்போதைய நிலையில் அது எப்படி இலங்கையில் 'வாய்க்கு' மென நம்பலாம்? யுத்தத்துக்கு முன் ஒரு இருத்தல் ஆறு, ஏழு சதமாக விற்கப்பட்டகோதுமைமா இப்போது நாற்பது சதமாக விற்கப்படின் அதனை யார் தான் விரும்பி வாங்க முன்வருவார்? அளவுகடந்த இலாபமடையும் மனப்பான்மையைக் [illegible] மையை வற்றுமதிசெய்யும் நாடுகள் விடவேண்டும். இலங்கை முழுவதிலும் இதுவரையும் நாள் வீதம் 500 தொன் கோதுமைமா உபயோகமாகி வந்ததாம். இப்போது எல்லாமாக 200 தொன் மாவே உபயோகமாகின்றது. மேலும் நாட்டில் இவ்வருடம் விளைவிக்கப்பட்ட நெல்லும் அதிகமென்றே கூறவேண்டும். அரசினரதும் பொதுமக்களதும் ஊக்கத்தால் உணவுப்பொருள் உற்பத்தி இவ்விதமாக விருத்தியடைந்து செல்வது போற்றப்படவேண்டிய விஷயம். நெல்லின் விலை மேன் மேலும் குறையுமென்பது பலரது அபிப்பிராயமாகும். நெல், அரிசியென்பனவற்றின் இறக்குமதியும் விரும்பியதற்கு மேலாகக் குறைவின்றிக் கிடைத்துவருகின்றது. [illegible] குறைக்கப்படு[illegible] அதனை இறக்குமதி ஸதிரமடைய இடமில்லை.

# பாதை ஓரத்தில்




யாழ்ப்பாணம் ஒரு வேடிக்கையான நாடு. இங்கு இருப்பவர்களில் அநேகர் இதை அறிவதில்லை. வெளியிலிருந்து வருபவர்களும் ஒருமாத காலமாயினும் இங்கு தங்கியிருந்தாற்ருன் யாழ்ப்பாணத்து மக்களின் ஆட்டோட்டங்களை ஒருவாறு அறிந்து கொள்ளலாம்.

இந்நாட்டில் உள்ளவர்கள் அத்தனைபேரும் பெரிய மனிதர்கள். அரசியல் அரிவரி தெரியாதவர்கள் இங்கு அரசியல் விற்பன்னராக விளங்குகின்றனர். பண்பாட்டின் உயர்வை அறியாதவர்கள் கலை வளர்க்கின்றனர். ஆடத் தெரியாதவர்கள் கூரையில் ஏறிநின்று 'ததிங்கணதோம்' போடுகின்றனர்.

இனி மற்ருேர் துறைக்கு வருவோம். 'புஷ்கோட்' அணிபவர்கள் தங்களைப் பிரதமர் சேனநாயகா என்று எண்ணி நடக்கின்றனர். இப்படி எல்லோரும இந்நாட்டு மன்னர்களாக யாழ்ப்பாணத்திற் செங்கோலோச்சி வருவதைக் கண்டு, சமீபத்தில் விடுதலை பெற்ற பாரதியார் கூடச் சில சமயம் யாழ்ப்பாணப் பக்கம் திரும்பிவிடவுங்கூடும்.

### பன்றித்தூது

தமிழ் இலக்கியத்தில் நாரை விடுதூது, கிள்ளைவிடுதூது, விறலிவிடுதூது என்றெல்லாம் படிக்கின்ருேம். இன்று ஜேர்மனியிற் கீல் என்ற இடத்திற் பன்றித் தூதைப்பற்றி அறிகின்ருேம். ஜேர்மனியிற் பன்றிகளுக்கு அளிக்கப்படும் உணவு அள்வைக் கூட்டும்படி ஜனதிபதி ட்ருமனுக்கு வற்புறுத்தி வெற்றிபெறும் நோக்கத்துடன் கீல் என்னும் இடத்திலுள்ள இருவர் 40 இருத்தல் எடையுள்ள ஒருபன்றியை ஓட்டிக்கொண்டு கால்நடையாக உவாஷிங்டன் நகருக்குப் புறப்பட்டனர்.

பன்றியின் முதுகிலே கட்டப்பட்டிருந்த அட்டையிற் பின்வருமாறு எழுதப்பட்டிருந்தது. "ஜேர்மனியிலுள்ள தனது சகாக்களுக்கு அதிக உணவு வாங்குவதற்காக இந்த ஏழைப் பன்றி கீல் என்னுமிடத்திலிருந்து அமெரிக்க ஜனதிபதியிடம்போகின்றது."

அமெரிக்க கப்பலொன்றில் தமக்கு இலவசப் பிரயாண வசதி கிடைக்குமென அப் பன்றியை ஓட்டிச் செல்பவர்கள் நம்புகின்றனர். ஜனதிபதியின் மாளிகையில் அப் பன்றியைச் சமர்ப்பிப்பதே இவ்விருவரின் நோக்கமாகும்.

இந்த நடவடிக்கையை அமெரிக்க மிருகவதைத் தடைச் சங்கத்தார் ஆட்சேபிக்கக்கூடுமென அறிந்தபோது அவ்விருவரில் ஒருவர் கூறியதாவது:

"நான் எனது மனைவியை எவ்வாறு நடத்துவேனே, அவ்வாறே இப் பன்றியையும் நடத்துவேன்"

இவரின் திடசித்தத்தை அறிந்த ஏனைய பன்றிகள் மகாநாடு ஒன்றுகூடி அவரைப் பாராட்டித்தீர்மானமும் நிறைவேற்றினவாம்.

### சுதந்திர ஞாபகம்

ரொறிங்டன் சதுக்கத்தில் ஓராமாண்டுச் சுதந்திர தினத்தின்போது பிரதமர் சேனநாயகா சுதந்திர ஞாபக சின்னம் ஒன்றை நிறுவுவதற்கு அத்திவாரக்கல் நாட்டிஞர் அல்லவா?

கொழும்பு நகரசபையின் கட்டட அமைப்புத்திட்டத்தை விஸ்தரிப்பதாயின் சுதந்திர ஞாபகசின்னந் தடையாக இருக்குமாம்.

ஆகவே, இதை வேறுஇக்கில் நிறுவினலும் சரி, கிடைத்தசுதந்திரம் இல்லாமற்போனலுஞ் சரி, நாட்டுமக்களின் உள்ளத்தில் ஒன்றுமாத்திரம்ஞாபகத்திலிருக்கும். அதாவது: சுதந்திர ஞாபகசின்னத்துக்கும் தடை ஏற்பட்ட மனவருத்தந்தான்.

### இலக்கிய நண்பர்கள்

இரு ஆண்டுகளுக்கு முன்னர் சென்னையில் இலக்கிய அன்பர்கள் இடையிடையே கூடி இலக்கியம்பற்றிப் பல விஷயங்களைப்பேசினர். தமது சந்தேகங்களையும் நிவிர்த்தி செய்தனர். ஆனல் இக்கூட்டந் தொடர்ந்து நடைபெறவில்லை' சமீபத்தில் நாட்டியம் ஆசிரியர் ரஞ்சன் அவர்கள் எழுதிய கடிதத்தில் ஸ்ரீதரன் அவர்களின் முயற்சியாற் சென்னையில் மீண்டும் இலக்கிய நண்பர்களின் கூட்டம் நடைபெற்று வருகின்றதெனத் தெரிவிக்கின்ருர். இது இலக்கிய நண்பர்களுக்கு மகிழ்ச்சி தரும் செய்தியாகும்.

### தமிழ்த் திருவிழா

திருவாரூரில் 16, 17-4-49 தேதிகளில் நடைபெறவிருக்கும் தமிழ்த் திருவிழாவுக்கு ஸ்ரீ ஓமந்தூர் ரெட்டியார் அவர்கள் தலைமை வகிக்கின்ருர். இவ் விழாவிற் சென்ருண்டு வெளியான ஒரு சில சிறந்த தமிழ் நூல்களுக்குப் பரிசுகள் வழங்கப்படும்.

இவ்விழாவின்போது தமிழ் வளர்ச்சிக்கான பல விஷயங்கள் ஆராயப்படும்.


வரப்பெற்ருேம்

**விரோதிவருஷ திருக்கணித பஞ்சாங்கம் 1949—1950**

யாழ்ப்பாணம் மட்டுவில் சி. சுப்பிரமணிய ஐயர் அவர்களாற் கணிக்கப்பட்டது. விலாசம்: "இல்லை வாசம்," மட்டுவில், சாவகச்சேரி, இலங்கை. விலை: ரூ. 1-25.

நுட்பமாகக் கணிக்கப்பெற்றுப் பிரதிவருடமும் வெளியிடப் பெறும் திருக்கணித பஞ்சாங்கம் சகல அம்சங்களுடனும் இவ்வாண்டும் தெளிவான அச்செழுத்துக்களில் வெளியாகியிருக்கின்றது. ஒரு நாளில் இரண்டு விரதங்கள் நேரின் அனுஷ்டிக்கும் முறையும் இதன்கண் சேர்க்கப்பட்டுள்ளது.


### வள்ளுவர் தந்த காந்தீயம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஸ்ரீ இளங்கோவன் அவர்களின் பேச்சும், காந்தீயத்தையே அடிப்படையாகக் கொண்டு அமைந்திருந்தது. இன்றைய உலகைப் பாதித்துள்ள அரசியற் பூசல்களையும், இந்தோனேஷியா சீனம் போன்ற இடங்களில் கிளம்பியுள்ள சண்டை சச்சரவுகளையும் சுட்டிக்காட்டிக் காந்தீயமே இத்தனைக்கும் உகந்த பரிகாரம் என்பதை அவர் தெரிவித்தார்.

கிராமணியார் எழுந்து பேசத் தொடங்கியதும் சபையில் ஒரே உற்சாகந்தான். கடுகுசிறிதாயினும் காரம் பெரிதென்பது கிராமணியார் விஷயத்தில் எவ்வளவு உண்மையாக இருக்கின்றது. துடிதுடிக்கும் மீசைக் கூடாக வெடித்துப்பறக்கும் வீரத் தமிழ் மொழிகளுக்குத்தான் எவ்வளவு சக்தி? எவ்வளவு வேகம்? அன்பர் ஒருவர் எழுதியிருப்பதுபோல மதுரையைத் தீ மூட்டச் செய்த கண்ணகிபோல் அல்லவா கிராமணியார் காட்சியளிக்கின்ருர்.

காந்தீயத்தைப்பற்றிப் பேசும்போது இவ்வளவு ஆவேசம் இருக்குமானல், கிராமணியார் அவர்கள், 'சுதந்திர இந்தியாவிற் சுதந்திரத் தமிழரசு' 'தமிழகத்தின் அரசியலைத் தமிழரே தயாரிக்கச் சுய நிர்ணயம்' என்ற விஷயங்கள் பற்றி முழங்கும்போது இந்த மறத்தமிழன் எவ்வளவு வீறு கொண்டு எழுவார் என்பதைப் பற்றிச் சொல்லவும் வேண்டுமா?

### ஏனைய கூட்டங்கள்

புதன்கிழமை காலை திருநெல்வேலி சைவாசிரியகலாசாலையில் பேசினர்கள். சென்ற வியாழக்கிழமைபிற்பகல் தெல்லிப்பழை மகாஜன கல்லூரியிலும், குரும்பசிட்டி சன்மார்க்கசபையிலும், பண்ணைகத்திலும் சொற்பொழிவுகள் நடைபெற்றன. சென்ற சனிக்கிழமை மாதகலிற் பேசினர். ஞாயிற்றுக்கிழமை வல்லுவெட்டித்துறையிற் பேசுவார்கள்.

திங்கட்கிழமை (11-4-49) பிற்பகல் ஐந்துமணிக்கு வைத்தீஸ்வரா வித்தியாலயத்திற் சொற்பொழிவு; செவ்வாய்க்கிழமை கொக்குவில்; வியாழக்கிழமை பிற்பகல் புங்குடுதீவு.

வெள்ளிக்கிழமை(15-4-49) திருக்கேதீஸ்வரத்துக்குப் புறப்படுகின்றனர். பின்னர் திருகோணமலை, கண்டி, மாத்தளை, கொழும்பு, கதிர்காமம், பண்டாரவளை போன்ற இடங்களைத் தரிசித்துவிட்டு ஹற்றன் என்ற இடத்தில் நடைபெறவிருக்கும் இலங்கை இந்தியர் வருடாந்த மகாநாட்டிற் பங்குபற்றுவார்கள். இம் மகாநாடு 22, 23, 24-4-49 திகதிகளில் நடைபெறுகின்றன.

கொழும்பிலே 18, 19-4-49 திகதிகளில் தங்குவார்கள் எனத் தெரிகின்றது. திருகோணமலைக்கு 6-4-49 திகதியில் விஜயம் செய்கின்றனர்.

ஹற்றன் மகாநாடு முடிவடைந்ததும் இவர்கள் 25-4-49-ல் சென்னைக்குப் பிரயாணமாவார்கள்.

வாசகர்களுக்கும் விளம்பர கர்த்தாக்களுக்கும் பத்திரிகை விற்பனவுகாரருக்கும் எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்தாரின் பெரும்பணி

## தென்னுபிரிக்கா அநீதி

- இந்தியா -

திருவாங்கூர், கொச்சி ஆகிய இருநாடுகளையும் இணைத்து ஒரு சிறந்த அரசியல்முறையிற் கொண்டுவர வேண்டிய எத்தனங்கள் செய்யப்படுகின்றன. சென்ற பன்னூற்றாண்டுகளாக இந்த இரண்டு சமஸ்தானங்களும் வெவ்வேறாகவே நிலைபெற்றன. இவ்விரு சமஸ்தானங்கள் வெவ்வேறாக இப்போது பரிபாலிக்கப்படினும் அவர்கள் பேசும் பாஷை, நாகரிகம், பழக்க வழக்கங்கள் என்பன ஒன்றே. ஆகவே, இரண்டும் இணைக்கப்படுங்கால் புதிய கஷ்டங்கள் தோன்றக் காரணமில்லை. சமஸ்தான மன்னர்களும் இந்தப் பிரேரணைக்கு விருப்பமாக விருப்பது பெரிதும் பாராட்டப்பட வேண்டிய விஷயம். சிறிய பல்வேறு அரசாங்கங்கள் புதிய உலகத்தில் நிலைபெறுவது இயலாத காரியம். ஆகையாற்றான் இவைகள் ஒன்று சேர்க்கப்படுகின்றன. வட இந்தியாவில் இவ்வாருகப் பல சமஸ்தானங்கள் ஒன்று சேர்க்கப்பட்டு வருவது யாவரும் அறிந்த விஷயம். விரும்பியபடி இச் சமஸ்தானங்கள் விருத்தியடைதற்கும் இவ்விணைப்புப் பெரிய உதவியாயிருக்கும். அத்துடன் எவ்வளவோ வீண் செலவுகளும் குறைக்கப்படலாம். சர்தார் படேலின் பெருமுயற்சியின் பயனே இது வென்று கூறலாம்.

### சர்தார் வாழ்க!

இந்தியா முழுவதும் சென்ற வாரம் சிறிது நேரத்துக்கு மிக்க ஊசலாடி வருந்தியது. டில்லி நகரிலிருந்து ஜெயப்பூர் சென்ற சர்தார் படேல் அவர்கட்கு என்ன ஆபத்து நேர்ந்ததோவென யாவர் மனமும் ஆற்ருெணுத் துயரில் மாண்டது. சர்தார் சென்ற விமானம் ஏதோ யந்திரக்கோளாருல் பலவந்தமாகக் கீழே வந்தது. சிறிதும் காயமடையாது தப்பிக் கொண்டனர். விமானத்தை யோட்டிய சாரதியின் கெட்டித்தனத்தால் விமானம் ஓர் ஆற்றின் கரையில் எவ்வித பழுதுமின்றி இறங்கியது. நள்ளிரவில் ஐந்து மணித்தியாலமாக நடுக்காட்டில் வசிக்கவேண்டியவராயினர். கடைசியாக வேண்டிய உதவிகளைப் பெற்று ஜெயப்பூர் சென்று சேர்ந்தனர். அதன்பின்தான் மக்கள் ஆறுதலடைந்தனர். இந்திய அரசியல் யந்திரம் இவரின்றேல் எவ்வித நிலையி லிருக்குமென்பது சொல்லாதே போதரும். இவரின் சேவை இந்தியாவுக்கு இன்னும் வேண்டியதாக விருக்கின்றதென்றே கூறவேண்டும்.

### ஹைதரபாத்

இச் சமஸ்தானத்தின் அரசியல் இன்னுஞ் சிலகாலத்துக்கு இராணுவத் தேசாதிபதியின் கையிலேயே இருக்கவேண்டியதாகின்றது. கொம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்களின் ஆர்ப்பாட்டம் இன்னும் சில் இடங்களிற் குறைந்தபாடில்லை. என்ருலும் இராணுவ உத்தியோகஸ்தர் இவர்கள் நடமாட்டங்களை மிகவும் அடக்கியே வருகின்றனர். ஹைதராபாத்தின் நிலை வருங்காலத்தில் யாதாகுமோவென்று இப்போது திடமாகச் சொல்ல வியலாது. எல்லாம் தேச மக்களின் விருப்பத்தையே பொறுத்தது. ஒருபோது பழைமைபோல் சமஸ்தானமாக நிலை பெறவுங்கூடும். அன்றேல் அயல் மாகாணங்களுடன் சேர்க்கப் படவும் இடமுண்டு. அடுத்த இரண்டு மூன்று வருடத்துள் எல்லாம் முடிவாகும். ஹைதராபாத் விஷயமாக இந்திய அரசினர் கையாண்ட நடபடிக்கையின் செலவு முற்ருக அச் சமஸ்தானத்திலிருந்தே அறவிடப்படும். இப்போது கலகக்கட்சித் தலைவராகும் கஷிம் இரஸ்வி அவர்களை நீதிமன்றத்தில் விசாரிக்க வேண்டிய ஆயத்தங்கள் நடைபெறுகின்றன. இச் சமஸ்தான முதன் மந்திரியாகவிருந்து சமஸ்தானப் பணத்தை அநியாய முறையிற் செலவுசெய்து வந்த லயிக் அலி என்னும் மந்திரியாரும் விரைவில் நீதிமன்றத்தில் விசாரிக்கப்படுவர்.

### தென்னுபிரிக்காவில்

தென்னுபிரிக்காவில் இந்தியர் நிலை வரவரச் சீர்கேடான கதியை அடைந்து கொண்டுவருகின்றது. இந்தியரை நாட்டினின்று ஓட்டிவிடச் செய்யும் உபாயங்கட்கும் அடாத முறைகட்கும் அளவில்லை. இவ்விஷயம் ஐக்கிய நாடுகள் சங்கத்தில் விவாதிக்கப்பட்டவிடத்தும் இன்னும் ஓர் திருப்தியான முடிவை அடையவில்லை. தென்னுபிரிக்க வெள்ளையர் இந்தியர்க்கு மாருகச் செய்வன யாவும் அடாத செயலென்பதை மேற்படி சங்கம் அங்கீகரித்துள்ளது என்ருலும் இச்சங்கம் சொல்வதைத் தென்னுபிரிக்கா அரசினர் பொருட்படுத்துவதாகக் காணேம். இவ்விஷயம் மறுபடியும் அடுத்தமாதம் அமெரிக்காவிற் கூடும் ஐக்கிய நாடுகள் சங்கத்தில் விவாதிப்பதற்கு வேண்டிய ஒழுங்குகள் செய்யப்படுகின்றன. இம்முறை இந்திய அரசினர் இவ்விஷயமாக ஒரு முடிவைக் காண வேண்டுமெனத் திடமாக நிற்கின்றனர். ஐக்கிய நாடுகளின் சங்கம் செய்த தீர்மானப்படி தென்னுபிரிக்கா அரசினர் செய்யாவிடின் அந்நாட்டினை மேற்படி சங்கத்தினின்று நீக்க வேண்டுமென்பது இந்தியாவின் பிரேரணை. எனவே இவ்விஷயமாக இம்முறை பெலமான விவாதம் ஏற்படுமெனக் காத்திருக்கலாம்.

### சென்னை மந்திரிசபை

சென்னையிற் புதிதாக அமைக்கப்பெற்றமந்திரிசபையை நோக்குமிடத்து ஏதாவது பெரிய நன்மை இதனல் வருமெனச் சொல்லுவது இயலாது. பழைய பேர்வழிகள் பலரே இதிலும் இடம் பெறுகின்றனர். இந்நிலையிற் பழையமந்திரிசபையையென்ருலிருக்கவேண்டுமோ தெரியவில்லை. மேலும் திறமையுடன் புதிய முறையில் யாவரும் மெச்சும்படி கடமையாற்றிய சில மந்திரிகள் விடப்பட்டனர். கல்வி மந்திரியாராகப் பணியாற்றிய ஸ்ரீ அவிநாசிலிங்கம் செட்டியார் கல்வி விஷயமாகச் செய்துவந்த திருத்தங்கள் பெரிதும் மெச்சப்பட வேண்டியன. தமிழ்க் கலைஆக்கத்துக்கு அவர் காட்டிய ஊக்கம் இம்மாத்திரமன்று சென்னையில் மாத்திரமல்ல இந்தியா முழுவதிலும் இவரின் திறமைக்கு மதிப்பு ஏற்பட்டு வந்தது. இப்படியான திறமை படைத்த ஒருவர் கல்வி மந்திரி பதவியினின்று நீங்கவந்தது பெரிய துர் அதிஷ்டமென்றே கூறவேண்டும். சென்னை மந்திரி சபையினர் அடையுந் தடுமாற்றத்துக்கு எல்லையில்லை வேறு எந்த மாகாணத்திலும் இப்படியான சங்கடங்கள் நடைபெறுவதாயில்லை. ஆனல், சென்னையில் மாத்திரம் இந்த ஊழல்கள் ஏற்பட்டுவருவது பெரிய நூதனமாகவே இருக்கின்றது.

---

### கிராமணியார் சொற்பொழிவுகள்

**ஞாயிற்றுக்கிழமை 10-4-49**

பருத்தித்துறை சித்திவிநாயகர் வித்தியாசாலை மண்டபத்தில் பிற்பகல் 4 மணிக்கு ஸ்ரீ மா. பொ. சிவஞானகிராமணியார் அவர்களும், ஸ்ரீ. அ. இளங்கோவன் அவர்களும் சொற்பொழிவாற்றுகின்றனர். ஸ்ரீ இராஜ அரியரத்தினம் தலைமை வகிக்கின்ருர்.

**திங்கட்கிழமை 11-4-49**

வண்ணார்பண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயத்திற் பிற்பகல் 4-30 மணிக்கு ஸ்ரீ சிவஞான கிராமணியார் நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் பற்றிப் பேசுகின்ருர். ஸ்ரீ. அ. இளங்கோவன் மக்களும் இலக்கியமும் என்னும் விஷயமாகப் பேசுகின்ருர். வித்துவான் பண்டிதர் கா. பொ. இரத்தினம் அவர்கள் தலைமைவகிக்கின்ருர்.


## கப்பற் பிரயாணம்

- மலேயாவுக்கு சென்னை மார்க்கம் பிரயாணஞ் செய்வது தற்சமயம் சுலபமும் சிக்கனச் செலவும் என்பதை உறுதிப்படுத்துகிறேம்.
- முன் கப்பல் போக்குவரத்து நெருக்கடியில் காத்திராப்பிரகார மேற்பட்ட சில அசௌகரியங்களைப் பயன்படுத்திச் சிலர் செய்யும் அவதூறுகளைச் செவிசாய்க்காது யுத்தகாலத்தில் பல துறைகளிலும் நாம் புரிந்த சேவைகளையும்இப்போது எம்மால்ஏற்பாடாகியிருக்கும் சௌகரியங்களையும்நன் குணர்ந்து எம்மூலம் பிரயாண வசதிகள் பெற்றுக் கொள்ளுமாறு வேண்டிக்கொள்கிறேம்.
- அளவுகடந்த கஷ்ட நஷ்டங்களைச் சமாளித்து இன்றுவரை உங்கள் பிரயாண வசதிகளை நவீனமுறையில் மேன்மேலும் சௌகரியப்படும்படி செய்வது யாழ்ப்பாணத்தில் எமது ஸ்தாபனம் ஒன்றே என்பதை மறவாதீர்கள்.
- கொழும்பு மார்க்கம் கூட்டுப் பிரயாண வசதி எம்மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

**எஸ். ஆர். எஸ். நாதன்**

21/3, ஸ்ரான்லி ரோட் : : யாழ்ப்பாணம்

'PALM GROVE'
Mowbray's Road,
MADRAS 18

21/3, Stanley Road,
JAFFNA

[3654]


### நற்றிருவும் பண்பும் அருள்வாய்

★

முதுதமிழ்ப் புலவர் மு. நல்லதம்பி

ஒற்றுமையும் அன்பும் உறவும் நெறியொழுங்கும்
நற்றிருவும் பண்பும் நனியருள்வாய் -- மற்று
விரோதஞ்செய் யாதே *விரோதியே! நம்பாற்
குரோதஞ்செய் யாதே குறித்து.

* விரோதி வருஷ

### ஸ்ரீ நா. பொன்னையா

ஈழகேசரி பிரதம ஆசிரியர் ஸ்ரீ. நா. பொன்னையா அவர்கள் சென்ற சனிக்கிழமை (9-4-49) சென்னைக்குப் பிரயாணமாயினர். அங்கு தங்கும் நாட்களில் திருவாரூரில் 16, 17-4-49 திகதிகளில் நடைபெறும் தமிழ்த் திருவிழாவிலும் பங்குபற்றுவார்.

இவருடன் ஸ்ரீமான்கள் க. நவரத்தினம், ச. அம்பிகைபாகன் ஆதியோரும் செல்லுகின்றனர்.

---

### கொழும்புநிருபர்கடிதம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மாதமும் ரூ. 600 செலவுப் பணமாகப் பெறுகின்றனர். அத்துடன் பிரயாண கால செலவுக்கென மேலதிகமாக ரூ. 75 உதவப்படுகின்றது. அங்கத்தவர்களின் கடிதப் போக்கு வரத்துக்கள் அதிகரித்துக் கொண்டிருப்பதால் அவற்றையெல்லாம் கவனிப்பதற்கு ஒரு இலிகிதரின் உதவி வேண்டுமெனக் கருதப்பட்டது. இதற்காகக் குறைந்த பட்சம் ரூ. 75 ஆயினும் கூட்டிக்கொடுக்க வேண்டு மென யோசிக்கப்பட்ட போதிலும், இதுவிஷயத்திற் பிரதிநிதிகளின் ஏகமனதான சம்மதத்தைப் பெறுவது இயலாத காரியமாகிவிட்டது. ஆகவே இதுபற்றி எவ்வித நடவடிக்கையும் எடுபடமாட்டாதாம்.

#### நடைபாதைச் செய்தி

புறக்கோட்டையிலுள்ள நடை பாதைகளிலே நின்றும் இருந்தும் நடந்தும் சாமான்களை, விற்றுத் திரிபவர்களின் தொல்லை தலையிடியையும் உண்டாக்கிவிடுகின்றது. இந்த நெருக்குவாரத்தைத் தீர்த்துக்கொள்ளுவதற்காகக் கொழும்பு நகரசபைத் தலைவர் அததகைய வியாபாரிகளை அவ்விடங்களினின்றும் அகன்றுவிடவேண்டுமெனக் கட்டளை பிறப்பித்துள்ளார். அத்துடன் அவர்களுக்கென இப்போது புறம்பான வேறு இடங்கள் தெரியப்பட்டுள்ளன. வெள்ளவத்தைத் தென்பகுதியிலும் இத்தொல்லை உண்டு. இனி இது இல்லாமற் போய்விடும். இதை மீறி நடக்கும் சின்னஞ் சிறு வியாபாரிமார்கள்மீது பொலிஸார் வழக்குத் தொடருவதற்குப் புதிய சட்டம் இடங்கொடுக்கின்றது.

#### மழையோ மழை!

புதன்கிழமை சாயந்தரம் கோட்டைப் புகையிரத ஸ்தானத்துக்குச் செல்ல வேண்டியிருந்தது. காங்கேசன்துறை வண்டி கோட்டையை விட்டுக் கிளம்ப முன்னர் இருண்டு திரண்ட வானம் 'சோ' என்று பொழிந்து கொட்டியது. இவ்வளவு மழையும் பொறுத்த நேரத்தில் வந்து இறங்கிய காரணத்தால்புகையிரதத்தில் ஏறிக் குசாலாகப் பிரயாணஞ் செய்ய வந்த அத்தனைபேரும் நனைந்ததுமன்றி ஈரமுள்ள பெட்டிகளுக்குள் இருக்க வேண்டிய நிர்ப்பந்தமும் உண்டாயிற்று.

### வட இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கம்

#### பிரிந்த ஆசிரியருக்கு அனுதாபம்

சென்ற கிழமை குறித்த சங்க நிர்வாகசபைக் கூட்டம் நடைபெற்றது. 21-3-49-ல் சிவபதம் அடைந்த, கொக்குவில், ஞானபண்டித வித்தியாசாலைத் தலைமை ஆசிரியரும், இச்சங்கக் காரியதரிசியுமாகிய திரு. அ. வெற்றிவேற்பிள்ளை அவர்களின் ஆன்மா சாந்தியடைய வேண்டும் என்று பிரார்த்தித்தனர். ஸ்ரீ வெற்றிவேற்பிள்ளை ஆசிரியர் அவர்கள் சமயப்பற்றுடைய தமிழ் அன்பன். சமூக சேவைக்கே பிறந்தவர். பலர் கூடிச் சாதிக்க வேண்டிய மகத்தான காரியங்களைக் குறுகிய காலத்துள் சாதித்தவர். ஆசிரியர்கள் எல்லாரும் மக்களாய் தலைநிமிருங்கள். சுதந்திர புருஷராய் வாழுங்கள் என்னும் தூய மன அன்பு அறிவுரையால் உணர்ச்சியூட்டி உயிர் தந்தவர். ஆசிரியர் சமூகத்தைப்பற்றியவிஷயங்களைக் கெடுதலாகவும் மதிப்பற்றும் எவரும் பேச அனுமதியாதவர்; பேசுவதைக் கேட்கும் ஆசிரியர்களைக் கண்டு சகியாதவர்; என்றெல்லாம் பொன் எழுத்தில் பொறித்து வைத்தாற்கூட தன்னை மறந்து தனிச்சேவை செய்த இன்பப் பணிக்கு ஈடாகுமா? அந்தோ அவர்களின் பிரிவு அவர்கள் குடும்பத்தை மாத்திரமல்ல ஆசிரிய உலகத்தையும் அல்லற் கடலிற் சூழச்செய்தமையால் அவர்கள் குடும்பத்திற்கு அனுதாபம் அறிவிக்கும் சாதாரண முறையோடு அமையாது 20-4-49 புதன்கிழமையன்று கீரிமலையில் ஆசிரியர்கள் அனைவரும் கூடி அவர்களின் அஸ்தி புண்ணிய தீர்த்தத்தில் சேர்க்கும் வைபவத்தில் பங்குபற்றிப் பின்னர் மருதனார்மடத்தில் உள்ள அவர்கள் வீட்டில் அவர்களின் உருவப்படந் திறந்து வைத்து அனுதாபம் தெரிவிப்பது எனத் தீர்மானித்தனர்.

மேலும் சங்கத்தின் பணமாய் திரு. அ. வெ. அவர்களின் பெயரில் வந்த 'போஸ்ரல், மணி ஓடர்'களை சங்கத்தலைவர், தனதிகாரியாகிய இருவர்களும் கைச்சாத்திட்டு மாற்றிக்கொள்ள அதிகாரம் அளிக்கத் தபாற் கந்தோர் தலைவர் அவர்களுக்கு சங்கத்தலைவர் மனுப்பண்ணவேண்டும் என்றும் தீர்மானித்தனர். —கடிதம்

---

### குரும்பசிட்டி சன்மார்க்கசபை

#### கிராமணியார் பேச்சு

சென்ற வியாழக்கிழமை (7-4-49) மாலை 6மணிக்கு குரும்பசிட்டி சன்மார்க்க சபை மண்டபத்திற் சபைத்தலைவர் திரு. கா. பொன்னையா அவர்கள் தலைமையில், தமிழரசு இயக்கத் தலைவரும் தமிழ் முரசு ஆசிரியருமாகும் திரு. சிவஞானகிராமணியார் அவர்களும், பிரசண்ட விகடன் துணை ஆசிரியர் திரு. இளங்கோவன் அவர்களும் **காந்தீயதத்துவம்** எனும் பொருள்பற்றிச் சொற்பொழிவாற்றினர். தமிழ்நூல்களை ஆதாரமாகக்கொண்டு கிராமணியார் அவர்கள் காந்திய அரசியலை விளக்கிவைத்தார்.

ஆசிரியர்திரு. க. செந்தில்நாதன், அவர்கள் அனைவருக்கும் நன்றி கூறினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை வாலிபரின் தீரம்

## பத்துரூபாயுடன் லண்டன் யாத்திரை

பத்துரூபாயுடன் கொழும்பிலிருந்து லண்டனுக்குப் போகலாமென்று சொன்னுற் பலர் அதைக்கேட்டு ஆச்சரியப்படுவார்கள். ஆனல் வெள்ளவத்தையைச் சேர்ந்த ரூனி ரொட்ரிக்கோ, இங்ஸ்லி மாக்கஸ் என்ற இரு வாலிபர்கள் பத்துரூபாயுடன் லண்டன் சென்றடைந்ததுமன்றிப் பிரதி வாரமும் இன்று 8 பவுண் உழைக்கின்றனர்.

7,000 மைல் தூரத்தைப் புகைவண்டிமூலமும் கப்பல் மூலமும் இவ் வாலிபர்கள் கடந்து சென்றிருக்கின்றனர். பரிசோதகர்களிட மிருந்து அகப்படாது தப்பிக்கொள்ளுவதற்கு இவர்கள் கையாண்ட முறைகளை நினைக்கும்போது திடுக்கிடவேண்டி யிருக்கின்றது. உயிரைக் கையிற் பிடித்துக்கொண்டே இவர்கள் ஒருமாதிரி லண்டனைச் சென்றடைந்திருக்கின்றனர்.

இவர்கள் இப்படி நடந்துகொண்டதைப்பற்றி உற்றூர் உறவினருக்கோ நண்பர்களுக்கோ தெரியாது.

கப்பற்காரர்களின் கண்களுக்குப்படாமல் அவர்கள் வெகு சாமர்த்தியத்துடன் இலவசப் பிரயாணம் செய்திருக்கின்றனர்.

இந்திய புகையிரதப் பகுதியின் பரிசோதகர்களைக் கூட இவர்கள் ஏமாற்றிவிட்டனர்.

லண்டன் சென்றடைந்ததும் இவர்கள் "ஹைட் பாக்" பக்கம் சென்று அவ்வப் போது அருகிலுள்ள சிற்றுண்டிச் சாலையிற் 'கோப்பி' சாப்பிட்டுத் திரும்பினர்.

இப்போது இவர்கள் சுரங்கச் சாலைகளில் உழைத்து வருகின்றனர். போதிய பணம் சேகரித்த பின்னர் இவர்கள் அமெரிக்கா செல்ல உத்தேசித்திருக்கின்றனர். ஆனல் இனி மாத்திரம் களவாக இலவசப்பிரயாணம் செய்வதில்லை யெனத் தீர்மானித்து விட்டனர்.

# நான்கு குழந்தைகள்

சென்ற திங்கட்கிழமை அதிகாலையில் கண்டி அரசாங்க வைத்தியசாலையிற் சலின் நோனு என்னும் 23 வயதுள்ள ஒரு இளம் பெண் நான்கு குழந்தைகளைப் பெற்ருள் என்ற செய்தி இலங்கை எங்கிலும் காட்டுத் தீயைப் போல் பரவிற்று. இக்குழந்தைகளைப்பற்றிய பேச்சுக்கள் இப்பொழுது எங்கும் கேட்கின்றன. இக்குழந்தைகளைப் பார்த்துவிடவேண்டுமென்ற ஆசையோடு ஏராளமான ஜனங்கள் அங்கு விஜயம் செய்த வண்ணமிருக்கின்றனர். குழந்தைகளைக் கண்டி அரசினர் வைத்தியசாலை அதிகாரிகள் விசேஷ சிரத்தையுடன் போஷித்து வருகின்றனர். இந்தக் குழந்தைகளின் பராமரிப்புக்கு உதவி புரிவதாக கண்டி நகரமேயர், அவைகளின் பெற்ரோர்களுக்கு வாக்குறுதி அளித்திருக்கிருர். ஸ்ரீமதி சலின் நோனு பத்திரிகை நிருபரிடம் கூறியதாவது:—

நாங்கள் தல்வத்தை என்னும் கிராமத்தில் வசிக்கிரேும். என் கணவர் ஒரு இரும்புக்கடையில் வேலை பார்க்கிருர். அவருக்கு தினசரி இரண்டு ரூபாய் சம்பளம் கிடைக்கிறது. மாதம் 10 ரூபாய் வாடகையில் நாங்கள் ஒரு குடிசையில் வசித்து வருகிரேும். எங்களுக்கு ஏற்கனவே ஒரு பெண் குழந்தை இருக்கிறது. அதற்கு இப்பொழுது இரண்டுவயதாகிறது. இந்தச் சொற்ப வருமானத்தைக் கொண்டு நாங்கள் எவ்வாறு ஜீவனம் செய்ய முடியும்."

பண உதவிபுரிவது சம்பந்தமாக தொழில்-சமூக சேவைப் பகுதி மந்திரியார் யோசித்து வருகின்றனர். துர்அதிஷ்டவசமாக இந் நான்கு பெண் குழந்தைகளுள் மூத்த குழந்தை இறந்துவிட்டது. ஏனைய மூன்று குழந்தைகளும் சுகமாயிருக்கின்றனவாம்.

ஆசிரியருக்குக்கடிதம்

# தமிழ்க் காங்கிரஸ் பிரதிநிதிகள்

டொனமூர் அரசியற்காலத்திலும் அதற்குமுன்னர் நிலவிய சட்ட நிரூபண சபைகளிலும் பிரதி நிதிகளிற் சிலர் பொது மக்களுக்காகத் தொண்டாற்றுது தங்கள் சுயநலத்தையே கருதி நடந்தார்களெனக் கண்டு தமிழ்மக்களில் ஒரு சாரார் தமிழ்ப்பிரதிநிதிகளைப் பிரதிநிதிகள் சபைக்குத் தெரிந்து அனுப்பும்போது, ஒருஸ்தாபன மூலமாக அனுப்பவேண்டுமென்றும், அங்ஙனம் அனுப்பினுல், அதற்கு அமைந்து நடப்பார்களென்றும், அவர்களுக்குள்ளே பிரிவினை ஏற்படாமல் ஒத்துழைப்பார்களென்றும் உணர்ந்து அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸ் மூலமாக மிகுந்த முயற்சி செய்து பிரதிநிதிகளை அனுப்பினுர்கள். சிலர் தமிழ்க்காங்கிரஸ் மூலமாக அபேட்சகர்களாக வர விருப்பமில்லாதிருந்தும், அதன் மூலமாக வெளிப்பட்டாற்ருன் தங்களுடைய எண்ணம் பூர்த்தியாகுமெனக்கண்டு, அதன்மூலம் வந்து தெரிவு செய்யப்பட்டார்கள்.

பொதுத் தேர்தலுக்குமுன்னர் தமிழ்க்காங்கிரஸ் கட்சியார், மிகுந்த ஊக்கத்தோடு, யாழ்ப்பாணத்தின் பல கிராமங்களுக்கும் சென்று, கிளைஸ்தாபனங்களையும் ஏற்படுத்தி, ஒவ்வொரு கிராமத்திலும் நிர்வாகசபை அங்கத்தவர்களையும் தெரிந்து, யாழ்ப்பாணப் பகுதித் தமிழ்க்காங்கிரஸ் நிர்வாகசபை மூலமாக, தெரிவுக்காக சகல வேலைகளையும் செய்துவந்தார்கள். தெரிவு முடிந்தபின்னும், இரண்டொரு நிர்வாகசபைக் கூட்டங்கள் ஒழுங்காக நடைபெற்றன. அதன்பின் தமிழ்க்காங்கிரஸ், உறங்கிவிட்டது.

யாழ்ப்பாணம் நகரசபைத் தெரிவுக்குச் சொற்பகாலத்துக்கு முன் நிர்வாகசபைக் கூட்டங்கள் கூடினர். அக் கூட்டங்களுக்கு நிர்வாகசபை அங்கத்தவர்களில் சிலரையே அழைத்தார்கள். சிலரை புறக்கணித்து விட்டு, தங்கள் எண்ணப்படி நடத்தி வந்தார்கள். தமிழ்க்காங்கிரஸ் பிரதிநிதிகளுக்குள் சில பிரிவினை ஏற்பட்டதனுல், யாழ்ப்பாணத்தில் ஓர் நிர்வாகசபை கூடி உபசபை ஒன்றை நியமித்தார்களென்றும், அந்த உபசபை பிரதிநிதிகளைக் கொழும்பிற் சந்தித்துத் தற்போதைய அரசியல் நிலைமைபற்றியும், தமிழர்களுடைய நலன்களைப் பற்றியும், அவர்களுடன் யோசிப்பார்களென்ற செய்தி பத்திரிகைகளில் வெளிவந்தது. அனேக அங்கத்தவர்களுக்கு அறிவித்தல் கொடாமல் சிலர் தங்களுக்குள் இந்த நிர்வாகசபைக் கூட்டங்களை கூடித் தீர்ப்பதாகத் தெரிகின்றது. மானிப்பாய்க் கோவிற்பற்றிலுள்ள எந்தக் கிராமத்து நிர்வாக சபை அங்கத்தவருக்கும் அறிவித்தல் கிடைக்கவில்லை. அங்ஙனமே மற்றும் கிராமங்களிலும் நடந்திருக்கக் கூடும். தமிழ்க்காங்கிரசை நம்பி அதிற் சேர்ந்து மிகவும் ஊக்கமாகவும், உண்மையாகவும் வேலைசெய்த நிர்வாகசபை அங்கத்தவர்களிற் பலரைக் கைவிட்டுக் கூடிய நிர்வாகசபைக் கூட்டங்கள், பிரமாணத்துக்கு மாருனதென்றும் அச்சபையில் தெரிவு செய்யப்பட்ட உபசபை சட்டத்துக்கு மாருனது என்றும், நிர்வாகசபை அல்லது உபசபை தற்போது செய்கிற வேலைகள் பொது சனங்களின் அபிப்பிராயமல்ல வென்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன். பொது சனங்களின் பெயரைக்கொண்டு சிலர் தம் அடிப்படையான நோக்கங்கள் கைகூடும் வண்ணம் தமிழ்க் காங்கிரஸை வைத்திருப்பது போலவே இப்போது தெரிகிறது. சுயநலம் கருதாது தமிழர்களின் பொதுநலம் கருதி ஓர் கட்சியைத் தமிழர் ஏற்படுத்தும் காலம் வந்துவிட்டது. தமிழ்ப் பெரியார்கள் அப்படி ஓர் கட்சியை அமைக்காது குற்றம் குறை மாத்திரம் கூறிக்கொண்டிருந்தால் ஒருபோதும் தமிழர் முன்னேற்றமடைய மாட்டார்கள்.

தமிழ்க் காங்கிரஸ் பிரதிநிதிகளிற் சிலர், சனங்களுக்காக ஒரு நன்மையையும் செய்ததைக் காணேம். தெரிவு முடிந்ததும் போய்விட்டார்கள். இரண்டு வருடங்கள் கழிந்தன பழைய பல்லவியைப் பாடவேண்டியதுதான். தங்கள் பகுதியிலுள்ள கிராமங்களுக்குச் சென்று சனங்களின் முறைப்பாடுகளைக் கேட்டார்களா? யாதேனும் உதவி செய்தார்களா? பிற இடங்களிற் கொண்டாட்டங்கள் நடததினுல், தங்கள் பகுதிக்கு நன்மைசெய்வதாகக் கருதலாமா? தங்கள் தங்கள் பகுதிகளுக்கு தாங்கள் வாக்குப் பண்ணிய பிரகாரம் பொருளாதார, கைத்தொழில், கமத்தொழில் முன்னேற்றத்துக்காக வேண்டிய எத்தனங்கள் செய்தார்களா? தமிழ் காங்கிரஸ் பிரதிநிதிகளையே தெரிவு செய்ய வேண்டுமென்று மிகவும் ஊக்கமெடுத்து வேலை செய்தவர்களைப் பொதுமக்கள் எவ்வளவு குறை சொல்லுகிருர்கள் என்பதை காங்கிரஸ் பிரதிநிதிகள் அறிந்துகொள்ள வேண்டும்.

சி. முத்துக்குமாரசாமி
மானிப்பாய்
4-4-49.

## திருமணம்

### அரசரத்தினம்—சரஸ்வதி

மானிப்பாய், சங்குவேலி வடக்கைச் சேர்ந்த ஸ்ரீ எஸ். சின்னப்பு அவர்களின் புதல்வன் செல்வன் அரசரத்தினம் அவர்களுக்கும், ஸ்ரீ எஸ். செல்லையா அவர்களின் புத்திரி செல்வி சரஸ்வதி அவர்களுக்கும் கொக்குவில் கிழக்கிலுள்ள மணமகள் இல்லத்திற் சென்ற திங்கட்கிழமை (4-4-49) காலை திருமணம் நிறைவேறியது. மணமக்களை இறைவன் ஆசீர்வதிப்பாராக.

## சுன்னகம் கிராம முன்னேற்றச் சங்கம்

சமீபத்திற் சங்கத்தலைவர் திரு ரீ. குமாரசாமி ஜே. பி. அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அக் கூட்டத்தில் நிறைவேறிய தீர்மானங்கள்.

(1) சுன்னகம் ஓர் பிரதான பட்டினமாயிருப்பதால் அதைப் பரிபாலிக்க ஒரு பட்டின சபை காலந்தாழ்த்தாது அமைக்கப்பட வேண்டும்.

(2) யாழ்ப்பாணக் குடா நாட்டின் கமக்காரரின் சீவனத்துக்குரிய புகையிலை, கத்தரி, மிளகாய், வாழை போன்ற பயிர்களுக்கு குருமன், கருக்தடி, போன்ற நோய்களேற்பட்டு நஷ்டம் விளைவிப்பதால் அதைத் தடுப்பதற்குரிய வழிவகைகளைக் கமத் தொழிற் பகுதியார் ஆராய்ச்சி செய்தறிதல் வேண்டும்.

(3) யாழ்ப்பாண மத்திய பஸ் கொம்பனியாரால் நடாத்தப்படும் பஸ் வண்டிகளின் நடமாட்டம் நேர வட்டவணைப்படி நடைபெறுவதில்லை. 'பஸ்' செல்லும் வழியிலுள்ள பிரதான சந்திகளில் 'பஸ்' செல்லும்நேரம் குறிப்பிடப் பட்ட விளம்பரப் பலகைகள் நாட்டப்பட வேண்டும்.

(4) 'பஸ்' வண்டிமூலம் பிரயாணஞ் செய்வோர் தொகை பன்மடங்காகக் கூடி விட்டமையால் பஸ்வண்டிகளின் தொகை அதிகரிக்கப்பட வேண்டும். உபயோகத்துக்குதவாத பழுதடைந்த 'பஸ்' வண்டிகள் ஓடுகின்றன அவைகளை அகற்றிவிட வேண்டும்.

(5) 'பஸ்' தொழிலாளர் பிரயாணிகளை நடத்தும் முறை மரியாதையோடு கூடியதாயில்லை. ஆகவே திருத்தமியலாத தொழிலாளர்களை நீக்கித் தகுதியும், மரியாதையும், ஒழுக்கமும் வாய்ந்தவர்களை நியமிக்கவேண்டும்.

# உலகப் பாதுகாப்பு?

(5-ம் பக்கத் தொடர்ச்)

### பழைய சம்பவம்

இங்கிலையில், பழைய சம்பவங்களை நினைவுகூருதல் நன்று. 1946-ம் ஆண்டிலே சோவியத் துருப்புகள் மஞ்சூரியாவிலிருந்து பின் வாங்கின. பின்னர் கொம்யூனிஸ்டுகளும் கைப்பற்றினர். அன்று ஆரம்பமான இந்த உள்நாட்டுக் கலகமானது யுத்தத்தின் போது சீனத்துக் கொம்யூனிஸ்டுகளும், சீனத்து அரசாங்கத்தினரும் ஒன்று சேர்ந்து ஜப்பானியரை எதிர்த்தனர்.

இதற்கு முன்னர் 1927-ல் தேசியச் சீனத்துக் கட்சிக்குள் பிளவு ஏற்பட்டது. இவர்கள் இடதுசாரிகள் வலது சாரிகள் என இரு பிரிவாகப் பிரிந்து சண்டையிட்டனர். கொம்யூனிஸ்டுகள் மஞ்சூரியாவை வசப்படுத்திக் கொண்ட பின்னர் வட சீனத்திலும் மத்திய சீனத்திலும் முன்னேறலாயினர். இச் சமயத்தில் அமெரிக்கா உதவிக்காக வந்தது. எனவே சியாங்கின் துருப்புக்கள் வடசீனத்தை யடைந்தன.

கொம்யூனிஸ்ட்டுகள் இதற்கிடையிற் பலம்பெற்று தெற்கு நோக்கியும் மேற்கு நோக்கியும் முன்னேறினர். சீனத்து அரசாங்கத்தின் முக்கிய நகரங்கள் யாவும் ஒன்றன் பின் ஒன்ருகக் கொம்யூனிஸ்டுகள் வசமாயின.

கொம்யூனிஸ்டுகள் பிப்பிங் நகரைச் சூழ்ந்து கொண்டு யாங்ஸியை நோக்கி முன்னேறினர். இச்சமயத்திற் ருன் (19-1-49) கொம்யூனிஸ்டுகளுடன் சமாதானம் செய்து கொள்ளச் சீனத்து அரசாங்கம் தீர்மானித்தது. இதற்கு இரு தினங்களுக்கு முன்னர் 22 வருடகாலமாகச் சீனத்தின் தலைவராக இருந்த தளபதி சியாங்கேஷேக் தலைவர் பதவியிலிருந்து விலகினுர்.

### கரேன்கள் சரணுகதி

பர்மிய அரசாங்கத்தை எதிர்த்துப் போராடும் கரேன் ஜாதியினரின் தலைவர் சரணாகதிப் பத்திரத்திற் கைச்சாத்திட இரங்கூனுக்குச் சென்றுள்ளாரெனத் தெரிகின்றது.

## ஆலயங்களில் உயிர்ப்பலி

சென்ற 31–3–49-ல் யாழ்ப்பாணம் இந்து மகாசபையிற் கூடிய நிர்வாகசபையில் ஆலயங்களில் உயிர்ப்பலியிடுதலை நீக்கும் நோக்கமாக யாழ்ப்பாணப் பட்டின சபைக்கும், பிரதிநிதிகள் சபை அங்கத்தவர்களுக்கும் கீழ்க்காணும் தீர்மானத்தை அனுப்ப வேண்டுமெனத் தீர்மானிக்கப் பெற்றது.

சில சைவ ஆலயங்களில் நடக்கும் உயிர்ப்பலியைச் சட்ட பூர்வமாக நிறுத்தும்படி இச்சபை வேண்டிக்கொள்கின்றது.

## விவசாய, கைத்தொழில் பொருட்காட்சி 1949

யாழ்ப்பாணப் பகுதி விவசாய ஆலோசனைச் சபையார் சிபார்சு செய்ததன்படி யாழ்ப்பாண நகரத்தில் ஓர் வசதியான இடத்திலே இவ்வருடம் ஓர் சிறந்த விவசாய, கைத்தொழிற் பொருட்காட்சி நடைபெறும். 4-8-49, 5-8-49, 6-8-49 ஆகிய திகதிகள் தற்காலிகமாக நிச்சயிக்கப்பட்டிருக்கின்றன. யாழ்ப்பாணப் பகுதியின் பல பாகங்களிலிருந்தும் பொருள்கள் கொண்டுவரப்பட்டுக் காட்சிக்கு வைக்கப்படும். இப்பகுதியின் விவசாய கைத்தொழில் முன்னேற்றத்தில் அனுதாபமுள்ள யாவரும் இத்திகதி [illegible] வேண்டப்படுகின்றனர். பொருட்காட்சிக்குரிய இடம் இன்னும் நிச்சயிக்கப்படவில்லை.

## கல்விப்பகுதி நெருக்கடி

### நியமனச்சிக்கல்

தற்காலிக வித்தியாபகுதிப் பதவிக்கு கல்விப் பகுதியைச் சேராத வெளி அதிகாரியொருவரை நியமிக்கும் யோசனையை அப்பகுதியிலுள்ள உயர்தர அதிகாரிகள் ஆட்சேபிப்பதாகத்தெரிகிறது.

குறித்த பதவிக்கு வெளியிலிருந்து ஒருவரை நியமிப்பதை ஆட்சேபிக்கும் கல்வி இலாகா உயர்தர அதிகாரிகள் அவர்களுடைய ஆட்சேபனையில் இம்மாதிரி வெளியிலிருந்து ஒரு அதிகாரியை நியமிப்பது தற்காலிக பதவியைக் கூட வகிப்பவர்களுக்குத் தகுதியில்லையென்று அதிகாரிகள் கருதுவதாகின்றது. இந்தப் பிரச்னையின் பேரில் கல்விப் பகுதியிலுள்ள ஒரு சில உயர்தர அதிகாரிகள் விலகிவிடக் கூடுமென்று தெரிகிறது.

## மறவன்புலோ கிராம முன்னேற்றச் சங்கம்

மறவன் புலோ கிராம முன்னேற்றச் சங்க ஆதரவில் ஓர் பகிரங்க பொதுக் கூட்டம் மறவன் புலோ வன்னியஞர் தோப்பு சிதம்பரசித்தி விநாயகர் ஆலயத்தில் (1-4-49) வெள்ளிக்கிழமை மாலை மேற்படி சங்கத் தலைவர் திரு மு. கணபதிப்பிள்ளை அவர்கள் தலைமையில் ஆரம்பமாயிற்று. தலைவர் முன்னுரையின் பின் காரியதரிசியின் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. பின்னர், மறவன்புலோ சகலகலாவல்லி வித்தியாசாலை மாணவ மாணவிகளின் நிகழ்ச்சிகளின் பின்னர் சைவத்திருவாளர் த. குமாரசுவாமிப்பிள்ளையவர்கள் "சந்தானகுரவர்" என்பதுபற்றிச் சிறந்த சொற்பொழிவாற்றினுர்.

தலைவர் நிறைவுரையின் பின் காரியதரிசி திரு. நா. பொன்னம்பலமவர்களின் நன்றியுரையுடன் கூட்டம் நிறைவேறியது.

—கடிதம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மருமக்களே!**

வணக்கம். நோபெல் பரிசு என்ற சொல் என்ன கருத்துடையது என்பது உங்களிற் பலருக்குத் தெரியாமலிருக்கலாம். 1896ம் ஆண்டில் காலம் சென்ற அல்பிறட் பேண் காட்நோபெல் என்ற சுவீடின் தேசத்தவரின் அந்தியகால சாதனத்தின்படியே நோபெல் பரிசுகள் வழங்கப்பட்டன.

இந்தப்பரிசுகளே, ஐந்து வகையாகப் பிரித்து ஒவ்வொன்றும் 7 500 பவுண் பெறுமதியுடையதாக வகுத்திருக்கிறார்கள். நாலு பரிசுகள்முறையே பூதநூல் (Physics), ரசாயனம் (Chemistry), இலக்கியம், மருந்து இவைகளில் யார் யார் முக்கிய ஆராய்ச்சி செய்து வருகிறார்களோ அவருக்கே இப் பரிசுகள் வழங்கப்படும்.

ஐந்தாவதாகச் சமாதானப் பரிசு. இது எல்லாவற்றிலும் சிறந்தது. நோர்வேக் குரிய விதி வகுக்கும் சங்கத்தவர்களால் ஆலோசனை செய்தே அளிக்கப்படும். ஆனால் முற்கூறிய நாலு பரிசுகளும் சுவீடின் வித்யாலயத்தினால் அல்லது ஔஷத சக்திவாய்ந்தவர்களால் வழங்கப்படும். இப்பரிசுகள் ஐந்தையும் மார்கழி10-ந் திகதியில்வரும் அவரது வருஷோற்சவத் தினத்தன்று வழங்கப்படும்.

* * *

இவ் வருஷம் கடைசியாக உங்களோடு கலந்து பேசுவதற்கு இன்று தான் ஒரு சந்தர்ப்பம். அடுத்த முறை நான் உங்களுடன் பேசும்போது விரோதி வருஷமாகிவிடும். இரண்டு வாரமாவது ஆறுதலாக இருக்கலாமென்ற எண்ணம். உங்களுக்கும் ஒரு ஆறுதலாக இருக்கட்டும். புது வருஷம் பிறந்தவுடன் மாமாவுக்குக் கடிதமெழுதுங்கள்.

என் பேரானும் ஈழகேசரி பேரானும் என் அருமை மருமக்கள் சகலருக்கு ஆசீர்வாதங்களேக் கூறுகிறேன். வணக்கம்.

கேசரிமாமா

## கவனிப்பு

வயது கூடியதன் காரணமாக பாலர் பகுதியிலிருந்து நீக்கப் பட்டவர்கள்.

மே.159. ச. ஸ்டானிஸ்லோஸ், மே.251. க. கந்தசாமி.

★

வயது கூடியதன் காரணமாகக் கீழ்ப்பிரிவிலிருந்து மேற் பிரிவுக்கு மாற்றப்பட்டவர்கள்.

கீ.3. அ. சந்திரா, கீ.30 பொ. மகேஸ்வரி, கீ.18. வி. சோதிலிங்கம், கீ.40. சி. கயிலாசபிள்ளை, கீ.57. வ. கதிர்காமநாதன், கீ.60. செ. புவனேஸ்வரி, கீ.65. ந. நல்லலிங்கம், கீ.66. செ. இராசலிங்கம், கீ.67. ச. தம்பிராசா, கீ.70.வி. கணபதிப்பிள்ளை, கீ.73. பொ. செல்வவினயகமூர்த்தி, கீ.84. ந. லீலாதேவி, கீ.109. பொ. மகாலிங்கம், கீ.128.க. சிதம்பரநாதன், மே.167. க. முத்துலிங்கம், மே.164. இ. மகேஸ்வரசர்மா, கீ 162. டி.சி. லக்ஷ்மணன், கீ.160. பொ. விஷ்ணு, கீ.154. பே. ஜெயசிலன், கீ.148. செ. சந்திரசேகரன், கீ.171. வ. குணசேகரம், கீ.184. சா. குலரத்தினம், கீ.193. அ. சுவாமிநாதன், கீ.196. இ. பாலேந்திரன், கீ. 199. பொ. காராளசிங்கம், கீ. 204. சி. சடாச்சரம், கீ.221. சு. கோபாலகிருஷ்ணன், கீ. 243. ஜெ. சற்குருநாதன், கீ. 248. ஐ. இராசேந்திரம், கீ. 260. வ. சுந்தரலிங்கம்.

### மருமக்கள்

மே.268. சபாபதி சிவனடிபாதம், ஆவரங்கால், அச்சுவேலி.

மே.269. வயிரமுத்து பழனிநாதன், ஒன்பதாம்வகுப்புயூனியன் கல்லூரி, தெல்லிப்பழை.

## பிறந்ததின வாழ்த்துக்கள்

**10-4-49—23-4-49**

கீ.4. அ. சுபத்ரா; கீ.14. க. யோகநாதன்; மே.72. ந. பஞ்சலிங்கம்; கீ.91. ச. மகேஸ்வரன்; மே.93. ஜோ. இம்மானுவேல்; கீ.101. சி. பொன்னுச்சாமி; மே 110. மா. எட்வேட்; மே.121 ல. சுப்பையா; மே.133. வே. சபாரத்தினம் மே.177. சி. நடராஜா; மே.180. வே. பாலசுந்தரம்; கீ.181. கா. செல்லையா; மே.213. நா. இரத்தினம்மா; மே.229. அ. கஸீம்; மே 250. நா. கருணைவதி; மே.264. சி. சிவசாமி.

❋

மேற்குறித்த எனது மருமக்கள் இன்றுபோல் இன்னும் பல்லாண்டு வாழ்வார்களாக.

## ஆராய்ந்து பேசுக

**இ. பேரின்பநாயகம்–மே.222**

**சபையிற் பேச வந்த ஒருவர்:** அறிவில்லாதவனுகிய எங்கள் சபைத்தலைவருக்கும், ஒளியில்லாதவனைப்போல் விளங்கிடும் சபை அன்பர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைக் கூறுகின்றேன்.

**சபையில் இருந்த ஒருவர்:** ஐயோ! எங்கள் சபைத தலைவரை அறிவில்லாதபேய னென்றும் எங்களை ஒளியில்லாதகுருடரென்றும் பேசுகின்றானே! இதென்ன துணிபு?

**சபையில் இருந்த மற்றொருவர்:** அப்படியல்ல அவர் கூறுவது சரி. அவர் எங்களுடைய சபைத் தலைவரின் அறிவு ஆதவனைப் போன்றதென்றும் சபையில் இருக்கின்ற நாங்கள் ஆதவனின் ஒளியைப் போற் பிரகாசிக்கின்றோமென்றும் கூறினர். நான் அவரை மெச்சுகின்றேன்.

**இதென்ன துணிவு என்று கூறியவர்:** சரிதான்! நான் ஆராயாமல் கூறிவிட்டேன்.

## தெரிந்ததா?

1. இலைகளில் முள் இருப்பதால் யாது பயன்?
2. முகமது, புத்தர், கிறிஸ்து இவர்கள் பிறந்த நாடுகள் எவை?
3. சிகிரியா எந்த அரசனின் இராஜதானி?
4. மின்னல் தெரியும்போது ஏன் முழக்கம் கேட்பதில்லை?
5. கொன்பூசியஸ் யார்?
6. என்ன மாதங்களிற் சோழகம் வீசும்?
7. இலங்கையின் கூடிய நீளம் அகலம் யாவை?
8. "நாலடியார்" யாரால் செய்யப்பட்டது?

### பதில்

1. வறட்சியுள்ள இடங்களில் வளரும் செடிகளின் இலையிலுள்ள நீர் ஆவியாக மாறிவிடாதபடி, கடினமாயிருப்பதற்காக.
2. மெக்கா, கபிலவஸ்து, பெத்லகேம்.
3. காசியப்பன்.
4. ஒளி, சத்தத்திலும்விரைவாகச் செல்வதால்.
5. சீனதேசத்துப் பெரிய ஞானி.
6. வைகாசி முதல் ஆவணி வரையும்.
7. 271½ மைல், 137½ மைல்.
8. சைன முனிவர்களால்

## கற்பிட்டி

**எம். எஸ். அகமது மே.263**

கற்பிட்டி, வடமேற்பிரிவில் புத்தளம் பகுதியிலே அமைந்துள்ளது. இது ஒரு குடாக் கடலைப் பிரதானமாகக் கொண்டுள்ளது. இந்து சமுத்திரத்தின் ஒரு கிளையையும் கொண்டுள்ளது. தென்னைச் செய்கைக்கு முக்கிய இருக்கையாக இருக்கின்றது. கொச்சி புகையிலை முருங்கை போன்ற பிரதான பயிர்கட்கு ஏற்ற நிலங்களைப் பெற்றிருக்கின்றது. இயற்கை வளங்கள் கண்டு கண்டு இரசிக்கத் தக்கதாயுள்ளது. எவ்விடத்திலும் நற்றண்ணீர். தண்ணீர்க் கஷ்டமேயனுகா. இவ்வளவு சௌகரியங்களேயும் பெற்றுள்ள கற்பிட்டி நகரை என்ன என்று சொல்வது? அதை எழில்மிகு கற்பிட்டி என்றுதான் சொல்ல வேண்டி இருக்கின்றது.

இதை டச்சு, ஒல்லாந்தாதியோர் அரசாட்சியில் இறையும் திறம்பாமல் நடாத்திவந்தனர். அரசாட்சி புரியத் தலைநகராகக் கொண்டதும் இதைத்தான். அதற்கு அவர்களாலாக்கப்பட்ட கோட்டையும், கோவில்களும் கட்டடங்களும் சாட்சி பகரச் சித்தமாயிருக்கின்றன. ஆங்கிலேயர் புகுந்தனர். கற்பிட்டி சிறு நகராகத் திரிந்து நாடாகியது. பல் [illegible] முடிப்பட்டது. வியாபாரங்களெல்லாம் ஸதம்பித்து விட்டன. மக்கள் மாக்களாகினர். தொழிலேற்க வகையறியாது திகைத்தனர்.

இந்நிலையில் பூர்வீகப் பணக்காரர்கள் தங்கள் மக்களை மேல்நாடுகட்குப் பயில அனுப்பிவைத்தார்கள். இவர்களினுல் கற்பிட்டிக்கும் மேல்நாடுகட்கும் நட்பு வளர்ந்தது. ஒரு பிரதான பாதை கோலி அரசாங்கத்தாரிடம் வாதாடினர். அரசாங்கத்தார் ஒரு பிரதான பாதையும் கொடுத்தனர். வாகனப் போக்குவரத்துக்கள் நடமாடின. பலர் வியாபார இலக்காகக் குடியேறினர். அவர்களிலனேகர் இந்தியர். இங்குள்ள சில, கலையுணர்ந்த பெரியார்களால் அனுப்பப் பட்ட எழில் முடங்கல்கள் அரசினரைத் தட்டி எழுப்பின. அரசாங்கத்தார் சில அதிகாரிகளை கற்பிட்டிக்கு அனுப்பி வைத்தனர். அவர்களின் வழியாய் இங்குள்ள வளங்களை அவதானித்தார்கள். இதை ஒரு முக்கிய நாடாக்கப் பிரயத்தனப் பட்டனர். ஒரு பாடசாலை திறந்தனர். பல உத்தியோகஸ்தர்களை அனுப்பினர். ஒரு சிறியவைத்திய சாலையும் உண்டாக்கினர். இங்கு ஊடாடிய மாணவர்கள் ஒரு படி உயர்ந்த படிப்பைப் பெற்றார்கள். விரைந்தனர் நாட்டை நகராக்க. நீர்கொழும்பு, சிலாபம், போன்ற பகுதிகளிலிருந்து மீன் பிடிப் படைகளைக் கொண்டுவந்தார்கள். மீன்பிடித் தொழிலையபிவிருத்தி செய்தனர். பல வியாபார ஸ்தலங்களைக் கட்டி இந்தியர்கட்கு வியாபாரத்தைப் புரித்தாக்கினர், பல சிங்களத் தொழிலாளர்கட்குக் கொச்சி புகையிலை போன்ற பயிர்களை வளர்க்க உரிமை கொடுத்தனர். இவைகளினுல் சனத் தொகை அதிகரித்தது. தென்னைச்செய்கையை மாத்திரம் எங்களூரவர்கள் செவ்வனே நடத்தி வந்தார்கள்.

நாட்கள் உருண்டு மாதங்களாகிப் பின்வருடங்களாகின. பல பட்டதாரிகள் முன் வந்தார்கள். தொழில்களெல்லாம் அயலூரவர்களிடம் இருப்பதையுணர்ந்தார்கள். வியாபாரங்கள் கூட இந்தியர்கள் கையில் இருப்பதையறிந்தார்கள். ஊருக்குப் பயனளிக்கக் கூடிய வைத்தியசாலை, பாடசாலை போன்ற வசதிகள் இல்லாததை உணர்ந்தார்கள். வருத்தமடைந்தார்கள்.

இந்தியர்களை விரட்ட முயற்சித்தார்கள். ஆனல் பயன் பெருது விடுத்தார்கள். அதற்குப்பதிலாகப் பலபெரிய வியாபாரங்களேயும் தொழில்களையும் கைப்பற்றினர்கள். கனிஷ்ட பாடசாலை ஒன்றை ஒரே நாளில் உற்பத்தியாக்கினர்கள். பெரிய வைத்தியசாலை ஒன்றை சில மாதங்கட்கிடையிலேயே திறந்துவைத்தார்கள். பாதைகளை எல்லாம் விஸ்தீரணப்படுத்தினர்கள். மதுபானக்கடைகளை இல்லாது ஒழித்தார்கள். மீன்பிடித் தொழில்மாத்திரம்சிங்களவர்வசமே இருக்கின்றது. இருக்கட்டும் அவர்களும் இலங்கையர் தானே.

இன்னும்நமதூருக்குத்தந்தி, டெலிபோன், மின்சாரம், பொது ரேடியோ, துறைமுகம், புதியமுறையில் பாடசாலைக் கட்டடம், தேங்காய் இயந்திரம், எண்ணெய் இயந்திரம், பெரிய தபாற்கந்தோர், போன்றவைகள் இல்லாதிருப்பதினுலேயே, கற்பிட்டி இருப்பதே உலகறியாமல் கிடக்கின்றது. இவைகளை நமதூரிடை புகுத்தி நந்நகராக்க இவ்வூர்ப்பணக்காரர்களும், அதிகாரிகளும் முயற்சி செய்வார்களாக. அவர்களனைவருடனும் ஊரவர்களும் ஒத்துழைக்க முன் வரவும் வேண்டும். அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு என்பதை யாராயுங்கள்.

## "சத்திய மார்க்கமடா"

**'அல்வாய்த்தணிகாசலம்'—மே.9.**

1. காந்தி என்றதுமே—நீர்க்கடல்
   கண்ணிற் பெருகுதடா
   சாந்த உள்ளத்தினிலே—அவரின்
   சாயல்கள் தோற்றுதடா.

2. காந்தி வழிநடந்து—எவர்க்கும்
   கருணை காட்டிடடா
   சாந்தி அவர்மொழிகள்—இவற்றைச்
   சகத்திற் பரப்பிடடா.

3. ஏங்கிடும் ஏழையானல்—வேதனை
   எந்தனை வாட்டுதடா
   ஓங்கும் குருவெனிலோ—பயபக்தி
   உள்ளே நிறையுதடா.

4. பாரதி நூல்களினல்—நவஉள்ளம்
   பாரில் உதிக்குமடா
   சாரதி போன்றவனின்—வழியே
   சத்திய மார்க்கமடா.

5. பலியிடுவோரைக் கண்டால்—என்னுள்ளம்
   பாய்ந்து பதைக்குதடா
   நலியும் உயிரினத்தைக்—கண்டிட்டால்
   நண்ணும் கருணையடா.

6. தமிழன் என்றதுமே—தனியொரு
   சால்பினை நாடிடடா
   அமிழ்தம் அவன்மொழியென்(று)
   —எண்ணியே
   ஆனந்தங் கொண்டிடடா.

7. அன்னை யென்றதுமே—அகத்தினில்
   ஆர்வம் பிறக்குதடா
   அன்னை மொழிநாடு—சமயமென்(று)
   ஆய்ந்து நடந்திடடா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்மக்கள் பண்பாடு

தமிழ்ப் பண்பாடு, தமிழ் இலக்கியம், தமிழ் இசை இவைகளிலும் அபூர்வமான ஆர்வத்தோடுதான் நிற்பார் சிவஞான கிராமணியார் என இரசிகமணி டி. கே. ஸி. கூறுகின்றார். ஆகவே, இவை பற்றி கிராமணியார்கொண்டுள்ள சில முடிபுகளை அறிவது நன்று சென்னை "இன்ப நிலையத்தார்" வெளியிட்ட தமிழன் குரல் என்ற அவரது நூலிலிருந்து இவை எடுக்கப்பட்டன. —ப-ர்.

கலை உலகிற் சென்றால் தமிழரின் கண்மூடித்தனம் கவலையைத் தருகிறது. கலை உணர்வில் தமிழருக்கு ஒப்பானவர் இவ்வுலகத்திலில்லை என்றால் மிகையாகாது. அந்த உயர் கலை — உயிர்க் கலை இன்று என்ன கதி அடைந்திருக்கிறதென்று பார்ப்போம். கலை வளர்ச்சிக்காகக் கடவுள் தத்துவத்தைக் கலை வடிவில் காட்டினர் ஆன்றோர். ஆனால் நாளடைவில், அந்தக் கடவுள் உணர்ச்சியானது கலை உணர்ச்சியைக் கொன்றுவிட்டது. அறிவைக் கடவுளாக வணங்கிய தமிழகத்தில் அறிவாளிகளின் தொகை நாளுக்கு நாள் அருகி வருகிறது.

இயல், இசை, நாடகமென்ற அறிவை வளர்க்கும் முத்தமிழ்க்கலைகளை வளர்ப்பதற்கு முதலிடமாகத் திகழ்ந்த கோயில்கள் இன்று அறியாமையைக் காக்கும் அரணாகப் பயன் படுகின்றன.

இனி, அடியார்களைப் பற்றிய கதைகளைப் படித்தாலோ அச்சத்தைத் தருகின்றன. காப்பாற்றும் கடமையை மேற்கொண்ட கணவன் தனது மனைவியைப் பக்தருக்குப் பரிந்தளித்த பகுத்தறிவற்ற கதை தமிழரின் நாகரிகமாகுமா?

## இசைக்கலை

இசைக் கலையை யெடுப்போம். தமிழகத்தில் இசை தொழிலோடு இணைந்துவாழ்ந்ததை மேலே சொன்னோம். இசையானது அன்று மக்களின் வாழ்க்கைக்கு வழி காட்டியது. பின்னாளில், இசைக்கலை அத்துறையிலிருந்து விடுபட்டு வானுலகிற்கு வழிகாட்டும் வேலையை மேற்கொண்டது. இன்று அதுவும் மாறி ஒரு சிலரின் பணப்பையை நிரப்புவதற்காக இசை பயன் படுகிறதே தவிர கேட்போரின் உள்ளத்தில் உரிமையில் பற்றும், கடமையில் உணர்ச்சியும் எழுப்புகிறதா வென்றால் இல்லையென்றே துணிந்து சொல்லலாம்.

நாடகக் கலையைப்பற்றிச் சொல்லவே வேண்டியதில்லை. அருமைக் குழந்தையைத் தாய் கால் பிடிக்க, தந்தை கழுத் தறுத்துக் கறி சமைத்துப் படைப்பதுதான் அன்பு வடிவான ஆண்டவனுக்குத் திருப்தியாம்! இந்தக் கொலை வழி தமிழர்கலை வழியாகுமா?

அம்மி மிதித்து, அருந்ததி காட்டி, அக்கினி சான்றாகக்,

## சிவஞான கிராமணியார்

ஒழுக்கத்தை உயிராகக் கருதியவன் தமிழன். ஆனால், நாடக உலகில் சிறிய பாத்திரங்கள் முதல் பெரிய நட்சத்திர நடிகர்கள் வரையில் மிகப் பெரும்பாலோரின் ஒழுக்கத்தைப் பற்றி உலகோர் அறிவர். நடிகர்களின் கதி இவ்வாறிருக்க, இவர்கள் நடிக்கும் கதையைப்பற்றிக் கேட்க வேண்டியதில்லை. சுருக்கக் கூறின், இன்றைய நாடக மேடையில் தமிழ் மொழியில் நாடகங்கள் நடக்கின்றன. என்றாலும், தமிழ்ப் பண்பாட்டிற்கும் அவற்றிற்கும் தொடர்பேயில்லை. மனிதர் பின்பற்றக் கூடாத ஒழுங்கீனமும், பின்பற்றமுடியாததும் அறிவுக்குப் பொருந்தாததுமான அருட் செயல்களும் தவிர பின்பற்றுதற்குரிய கற்பனைகள், காட்சிகள் ஏதேனுமிருக்கின்றனவா என்பது ஐயத்திற் கிடமே!

## இசைத் தமிழ்

இயற்றமிழ்த் துறையில் புதுப்புது எழுத்தாளர்கள் நாளுக்குநாள் பெருகி வருகின்றனர். புதுமலர்ச்சி, மறுமலர்ச்சி, எழுத்தாளர்கள் என்றெல்லாம் போற்றப்படுகின்றனர். ஏதோ புரியாத வகையில் நூல்கள் வெளிவந்த காலம் போய்ப் புரியக் கூடிய முறையில் எழுதும் இந்தப் புதுமலர்ச்சி எழுத்தாளர்களைப் பாராட்ட வேண்டியதுதான். ஆனால், வெறும் எழுத்தில் மட்டும் மலர்ச்சி தோன்றினால்போதுமா? எண்ணத்திலும் இருக்கவேண்டாமா? தற்காலம் வெளிவரும் தமிழ் உரை நடை நூல்களில் பெரும்பாலானவை வெறும் பொழுது போக்குக்காகப் படிக்கும் தன்மையனவே ஒழிய, வாழ்க்கையிற் புத்துணர்ச்சி யூட்டக்கூடிய நூல்கள் மிகச் சிலவேயாகும். வரலாற்று நூல்களோ வெனில், வீரத்திற்குச் சிவாஜியையும், தேசபக்திக்கு ஜான்ஸி ராணியையும், அன்புக்கு அசோகரையும் மட்டும் எடுத்துக் காட்டாகக் கூறுகின்றனவே யொழிய, செங்குட்டுவன் வீரத்தையும், கண்ணகியின் புரட்சியையும், கம்பனின் சமதருமத்தையும் அவை நமக்குக் கற்றுத் தருவதில்லை. இந்த வரலாற்று ஆசிரியர்கள்,

சேரன் தம்பி சிலம்பை
இசைத்ததும்
தெய்வ வள்ளுவன்
வான்மறை கண்டதும்
பாரில் நல்லிசைப்
பாண்டிய சோழர்கள்
பாரளித்ததும் தருமம்
வளர்த்ததும்
முன்னார்நாடு இகழ்ந்த
பெருமையும்
அன்னையாவும் அறியார்களோ
அல்லது அறிந்தே மறந்தார்களோ ஒன்றும் சொல்வதற்கில்லை. இலக்கண, இலக்கியங்களில் வல்லுநராய்த் திகழும் தமிழ்ப் பண்டிதர்கள், தமிழுக்காகச் சேவை செய்திருக்கிறார்கள் என்பது நமக்கு ஓரளவு மகிழ்ச்சியைத் தருகிறது. என்றாலும் இவர்களது போக்குக் காலத்தோடு ஒட்டியதாயில்லாம லிருப்பது வருந்தத்தக்கது.

திருவள்ளுவரின் அறத்துப் பாலுக்கு விளக்கம் கூறி வெளிவந்த நூல்கள் எண்ணிலடங்காதன. இவை வேண்டியனவே. என்றாலும் அரசியல் நெறியையும், ஆண்மைக்குணத்தையும், பொருளாதாரப் புதுவழியையும் புகட்டக் கூடியபொருட்பாலை ஆராய்ந்து தற்காலத்திற்குப் பொருந்தக் கூடிய வகையில் வெளிவந்த புத்துரைகள் ஏதேனும் உண்டா? இல்லையென்றே சொல்லலாம்.

திருக்குறள் மட்டுமன்றி, பழைய தமிழ் இலக்கியங்கள் அத்தனையும் நம்முடைய அரசியல், பொருளாதாரப் போராட்டங்களுக்கு மிகவும் பயன்படக் கூடியனவே என்பதில் ஐயமில்லை. ஆனால் அப்படிப் பயன்படாம லிருப்பதற்குக் காரணம் இன்றைய அரசியல் தலைவர்களுக்கு இலக்கிய ஞானமும், பண்டிதர்களுக்கு அரசியல் உணர்ச்சியும் இல்லாததேயாகும். இனியேனும், இந்நிலை மாற வேண்டுமானால் தமிழும் அரசியலும் ஒன்றுபட்டே தீர வேண்டும்.

## பெண்மணிகள்

பெண்களின் நிலையைப் பேசுவோம். 'அல்லி பிறந்து அரசாண்ட நாடு' என்கின்றனர். ஆனால், இன்றைய தமிழகத்தில் அரசியலாரின் கோட்டைக்குள் அமர்ந்து அரசாட்சி செய்யும் தமிழ்ப் பெண்கள் எத்தனை பேர்? பண்டைய மறவர் குலத்து வீர மகளிரைப் போன்று இன்றைய சுதந்திரப் போரில் தலைமை தாங்கும் தமிழ் மகளுண்டா? இந்த நிலை ஏற்படக் காரணமென்ன? தமிழ்ப்பெண்களின் பிற்போக்குக் குணமா? வீரமற்ற தன்மையா? இல்லவே யில்லை. எண்ணற்ற பெண்மணிகள் சுதந்திரப் போரில் ஈடுபட்டு அளவற்ற தியாகங்கள் செய்துள்ளனர். ஆனால், அவர்கள் முன்னுக்கு வர வாய்ப்பு தரப்படவில்லை. இன்றைய தமிழ்நாட்டுஅரசியலில்தமிழர்எனப்படுவோர்தலைமை தாங்குகிறார்கள் என்பது உண்மைதான். ஆனால், அவர்களுக்குத் தமிழ் மனம் இல்லையெனத் தயங்காது கூறுவேன்.

தமிழ் இலக்கியப் பயிற்சியோ, தமிழ் இனத்தைப் பற்றிய வரலாற்று அறிவோ இல்லாதவர்களிடம் தமிழ் மனம்தோன்றுவது எங்ஙனம்.

தமிழ்நாட்டில் அன்று அரசியல் தலைமை தமிழ்ப் பண்பாடு அறிந்தவர்களிடமே இருந்தது. வ. உ. சிதம்பரனார், வ. வே. சு. ஐயர், திரு. வி. கலியாணசுந்தரனார் ஆகிய தமிழறிஞர்கள் தமிழ் நாட்டுத் தலைமையேற்று நடத்தினர். ஆனால், இன்றைய நிலைமையை அப்படிச் சொல்வதற்கில்லை. இனப்பற்றும் மொழிப்பற்றும், உடையோர் இன்றைய தேசிய வாதிகளில் எத்தனை பேர் இருக்கின்றனர் என்பதை எண்ணிப் பாருங்கள். தமிழ் மொழியின் வளமும் தமிழ் நாட்டின் வரலாறும் தமிழ் இனத்தில் மேன்மையும் அறியாதார், தமிழ்நாட்டின் அரசியலில் தலைமைதாங்கும் நிலைமையில், தமிழ் வளரவில்லை யென்றால், தமிழ் நாட்டின் எல்லை பறிபோகுமானால், தமிழ் நாட்டிலேயே தமிழ் இனத்தவரைப் பிற இனத்தார் அடக்கிவைத்து ஆள்வார்களானால் அதில் வியப்பு என்ன இருக்கிறது!

புலவர் பனம்பாரனார், தாம் இயற்றிய தொல்காப்பியப் பாயிரத்தில்,

"வடவேங்கடம் தென்குமரி
ஆயிடைத்
தமிழ் கூறும் நல்லுலகம்"

என்றார்.

"நீலத் திரைக்கடல் ஓரத்திலே—
நின்று
நித்தம் தவஞ்செய் குமரி எல்லை—
வட
மாலவன் குன்றம் இவற்றிடை
யேபுகழ்
மண்டிக் கிடக்கும் தமிழ்நாடு"

என்று பாரறியப் பறை சாற்றினார் பாரதியார்.

ஆனால் இன்றைய தமிழ் நாடு குமரி முதல் வடவேங்கடம் வரை நிலவி யிருக்கிறதா? இல்லை யென்பதைச் சொல்லத் தேவை யில்லை. பழைய சேரநாட்டின் பெரும் பகுதி இன்று கேரள நாடாக மாறி விட்டது. எஞ்சியுள்ள சிறு பகுதியும் திருவிதாங்கூர் சமஸ்தானத்தில மலையாளிகளின் ஆட்சிக்கு அடிமைப்பட்டிருக்கிறது. தமிழ் மொழியிற் பிற மொழி கலந்ததும் தமிழகத்தில் பிறாது பண்பாடு படை எடுத்ததுமே இதற்குக் காரணமாகும்.

## ஆங்கில சுவபாஷா ஆசிரியர்கள்

### பிரதிநிதியின் உறுதிமொழி

அகில இலங்கை ஆங்கில சுவபாஷா ஆசிரியர்களின் விசேட பொதுக்கூட்டம் ஒன்று 3-4-49 ஞாயிற்றுக்கிழமை காலை யாழ்ப்பாணம் பாரதி பாஷா பாடசாலையில் ஸ்ரீ கே. சோமசுந்தரம் தலைமையில் கூடிற்று. சங்கத் தலைவர் ஆசிரியர்களின் குறை நிறைகளை நன்கு எடுத்து விளக்கினர். திரு. ஏ. ஈ. தம்பர் சங்கங்கள் ஒழுங்கு முறையாகத் தமது கோரிக்கைகளைச் சாதிக்கும் முறைகளை ஆங்கிலநாட்டு வழமையுடன் எடுத்துக்காட்டி விளக்கினர்.

சாவகச்சேரிப் பிரதிநிதி ஸ்ரீ வி. குமாரசுவாமி அவர்கள் ஆசிரியர்களே சமுதாயத்தின் சிற்பிகள் எனவும், 'பஸ்' தொழிலாளரின் வேதனத்திலும் சில ஆசிரியர்கள் குறைந்த வேதனம் பெறுவதைத் தாம் நிவிர்த்திபண்ணச் சங்கங்கள் ஒற்றுமைதால் வேண்டும் எனவும் கூறினார். கல்வித்திட்டத்தை ஆதரித்து அதில் வேண்டிய திருத்தங்களையும் ஆணித்தரமாகக் கூறினர். ஆசிரியர்களுக்குத் தம்மாலான உதவிசெய்ய உறுதி கூறினர். ஸ்ரீ ஏ. ஈ. இரத்தினசாமி, சங்கம் செய்த சேவையைப் பாராட்டினர். —கடிதம்.



தேக மலர்ச்சியே
அவரை தகுதியும் தந்நம்பிக்கையும் உடையவராகச் செய்கிறது

அவர் ஒரு பிரபல சாம்பியன். எல்லோரும் அவருடைய சந்தோஷ மனப்பான்மையையும் தந்நம்பிக்கையையும் மெச்சுகிறார்கள். அவர் தினமும் லைப்பாய் பாவித்து ஸ்நானம் செய்கிறார். அதன் செழிப்பான சுறுசுறுப் பளிக்கும் நுரை சருமத்துவாரங்களில் ஊடுருவிப்பாய்கின்றது. அவருக்கு ஊக்கத்துடன் மகிழ்ச்சி தரும் தேகமலர்ச்சியையும் அளிக்கின்றது. இதர ஸ்நான சோப்புகளைவிட லைப்பாய் 20% காரம் குறைந்தது. அதனாலேயே முகம், கைகள் கழுவுவதற்கு மிகச்சிறந்தது.




இதனால் தான் அவர் பாவிக்கிறார்
லைப்பாய்
டாய்லெட் சோப்

L.B.T. 21-169 TM

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜே. ஸி. எதிர்விரசிங்கம் எழுதிய:

# கன்னியின் கலக்கம்

*

மொழி பெயர்ப்பு: இ. அ.

3

நிலையிலே இருந்த ஒரு பெரிய சுமை நீங்கிவிட்டால் எவ்வளவு சுகமாக இருக்கின்றதோ அதே போலத்தான் அந்த வாலிபனின் நிலைமையும் இருந்தது. குமாரசூரியரின் உள்ளத்தில் இவ்வளவு காலமாக இருந்த ஒரு பாரம் நீங்கிவிட்டது. அவன் சிட்டுக்குருவிபோல வீட்டுக்குப் பறந்து சென்றான். ஆளுக்குச் சொல்லமுடியாத குதூகலம். எண்ணிய எண்ணங்கள் எவ்வளவு? கண்ட கனவுகள் சொல்லுந்தரமா? கட்டிய கோட்டைகள் இம்மட்டு அம்மட்டா? இத்தனையும் ஒன்றின்பின் ஒன்றாக நிறைவேறி வருவதாக அவனுக்குத் தோன்றியது. ஏதோ, வாழ்க்கையின் இலட்சியமே கைகூடிவிட்டதாக நினைந்து அவன் மகிழ்ந்தான்.

காதல் என்றால் அது ஒருவிதமான சித்தப்பிரமை என்றுதானே சொல்லுகின்றார்கள். குமாரசூரியரின் விஷயத்திலும் இது உண்மையாகவே இருந்தது. அவனுக்கு உறக்கமே வரவில்லை. கண்களை மூடி ஒருவிதமாக நித்திரைக்குப் போகவேண்டியதுதான் தாமதம், உடனே அந்த அழகு இராணி அவன் மார்பில் நின்று நர்த்தனம் புரியத் தொடங்கிவிடுவாள். ஆகவே, அவன் இரவு முழுவதையும் யோசனை செய்வதிற்றான் கழித்து வந்தான். ரோசம்மாவின் சுவைததும்பும் இதழ்களையும், அவை தமக்குச் சொந்தமாகக் கிடைத்தவுடன் அவற்றால் அடையவிருக்கும் இன்பமான வாழ்க்கையைப்பற்றியும் நினைத்தபோது, ஆகாயத்திற் பறந்து சென்று மேகங்களினிடையே சஞ்சரிப்பதுபோன்ற ஒரு உணர்ச்சி அவனுக்கு ஏற்பட்டது. உலகத்திலே அவள் விரும்பும் பொருட்கள் அனைத்தையும், அவளுடைய காலடியிற் குவித்து வணங்குவதற்கும் அவ் வாலிபன் தயாராக இருந்தான்.

*   *   *

மகள் ரோசம்மா கன்னியாஸ்திரியாகக் காலங்கழிக்கத் தீர்மானித்து விட்டாள் என்பதை அறிந்து அவளுடைய பெற்றார் சஞ்சலமடைந்தனர். கண்ணின் மணிபோலக் காப்பாற்றிவந்த ஒரே ஒரு மகள் கன்னியாக இருந்துகொள்ளப் போவதை நினைந்து அவர்கள் கலக்கமடைந்தனர்.

ஆண்டவன்மீது பாரத்தைப் போட்டுவிட்டிருந்த இருவரும் மகள் அன்று நடாத்திய காதல் நாடகத்தைப்பற்றிக் கேள்விப்பட்டனர். தெருக்கரையில் நடந்த சகல காரியத்தையும் 'றைவர்' ஒவ்வொன்றாக அவர்களுக்குத் தெரிவித்திருந்தான். கன்னியாஸ்திரி மடத்துக்குத் தன்னை அர்ப்பணம் செய்யமாட்டாள் என்பதை அறிந்தவுடன் அவர்கள் எல்லையற்ற மகிழ்ச்சியடைந்தனர். மகளின் தியாக வாழ்க்கையானது நறுமணங்கமழும் ஒரு சோலையாக மாறப் போகின்றதே என்ற செய்தி அவர்களின் உள்ளங்களை அப்படியே குளிரச் செய்தது.

அன்றிரவு ரோசம்மா கட்டிலுக்கருகே முழங்காற்படியிட்டுச் செபம் செய்யும்போது தனது நண்பனையும் நினைந்து அவனுக்காகவும் செபம் செய்தாள். மனுக்குலத்தை இரட்சிப்பதற்காகச் சிலுவையில் அறையுண்டு மரித்த தேவசுதனின் சேவையில் அவ் வாலிபனும் ஈடுபடத் தீர்மானித்து விட்டானே என்று நினைந்து அவள் மகிழ்ந்தாள். அவனையும் இரட்சிக்கும்படி அவள் ஆண்டவனை வேண்டிக் கொண்டாள்.

நாட்கள் கழிந்து சென்றன. ரோசம்மாவும் ஏதோவெல்லாம் நினைந்து கொண்டிருந்தாள். அவ் வாலிபன் இருதய பூர்வமாக வணங்கும் அந்தப் பொருள் ஆண்டவன் அல்ல என்று அறிந்தவுடன் அவளுக்கு இருண்டது விடிந்தது ஒன்றுமே தெரியவில்லை. அவள் கடவுளைக் காதலித்ததும், அவன் கன்னியைக் காதலித்த சமாச்சாரங்களும் மெல்ல மெல்லத்தான் திரையைப் பிறிக்கொண்டு வெளிவரலாயின. அந்த வாலிபனின் அடாத யோசனையை எண்ணி அவள் மிகவும் வருந்தினாள். ரோசம்மாவுக்குக் கலியாணம் செய்யும் கருத்து அறவே யிருக்கவில்லை. வாலிபனுந் தன்னுடன் சேர்ந்து தியாக வாழ்க்கையை மேற்கொள்ளப்போகின்றான் என்றுதான் அவள் எண்ணியிருந்தாள். ஆகவே, ஒருநாள் அவள் அவ்வாலிபனைக் கண்டு பேசியபோது தன்னை விவாகம் செய்துகொள்ளும் யோசனையை அகற்றிவிடும்படி வற்புறுத்தினாள். இது விஷயமாகத் தன்னைத் தொந்தரவு படுத்த வேண்டாமெனவும் அவள் அவனை வேண்டிக் கொண்டாள்!

முத்தையாபிள்ளை எவ்வளவுதான் புத்தி புகட்டியவிடத்தும் ரோசம்மா அசையவில்லை. கலியாணம் என்ற பேச்சு அவளுக்கு நாராசம் போலவேயிருந்தது. உயர்ந்த சாதியிற் சிறந்த ஒரு வாலிபனை மணக்க மகள் மறுத்து நிற்பதைக் கண்டு தகப்பனார் ஆச்சரியப்பட்டார். மகளுக்கோ பெற்றோரின் பேச்சுக்கள் கசப்பையே ஊட்டி வந்தன. "எனது அருமைப் பெற்றார்களே, தயவுசெய்து எனனுடன் கலியாணம் என்ற பேச்சையே வைத்துக்கொள்ளவேண்டாம். கிறிஸ்துநாதரின் சேவையே எனது பாக்கியம், அவருடைய திருப்பாதங்களைத் தேடி ஆண்டவனின் இராச்சியத்தை யடைந்தாலன்றி எனது நோக்கம் நிறைவேறமாட்டாது. கன்னியாஸ்திரியாகச் சேர்ந்து தேவ ஊழியஞ் செய்வதென நான் தீர்மானித்து விட்டேன். அதுவே எனக்குச் சாந்தியளிக்கும் அமுதமாகும்" என ரோசம்மா ஒருநாள் உள்ளதை உள்ளபடி கூறியிருந்தாள்.

இதைக்கேட்ட தாயாருக்குக் கண்களிலிருந்து நீர் பெருகியது. மகளை அணைத்துக்கொண்டே அவள் பேசுகின்றாள்: "எடி பிள்ளை, கலியாணம் கட்டிக்கொண்டும் தேவனுக்கு நல்ல பிள்ளையாய் நடக்கலாம். முதலியாற்றை பேரப்பொடியர் உன்னைத்தான் முடிக்கவேணுமெண்டு நாண்டு கொண்டு நிற்குதாம். எங்கடை மனசைக் கலக்கிறாய் எண்டு நினைக்காதே. அந்தப் பொடியற்றை மனசையுந்தான் பழுதாக்கிறாய். அது பெரிய பாவமெடி. உன்னை நம்பி இவ்வளவு தூரம் இறங்கி வந்துவிட்டுது. எடி, அந்தப் பொடியருக்குக் கோறணமேந்திலையாம் வேலை. கச்சேரிக்குப் போற உத்தியோகம் எண்டால் நல்லதெடி. நீ கன்னியாஸ்திரியானால் எங்கடை பணம், சொத்து இதையெல்லாம் யாரடி பாக்கிறது. கொப்பருக்கு உன்ரை மாதிரியள் பிடிக்கவில்லை. அது பாவம்; ஊணுறக்கமோ இல்லாமல் உருகிப்போச்சு. நான் சொல்லுறதைக் கேள்; கன்னியாஸ்திரியாகப்போற யோசினை வேண்டாமெடி."

"எணை ஆச்சி; சும்மா இருங்கோ. நான் மடத்திலே சேர வேண்டுமெனத் தீர்மானித்து விட்டேன். மடத்திலுள்ள கன்னியாஸ்திரிமார் என்னைத் தங்களுடன் சேரும்படி கேட்டுக்கொண்டே இருக்கின்றனர். எனக்கு நல்ல விருப்பமாக இருக்கிறது. இந்த உலகம் முழுவதுந்தான் கிடைத்தாலும் ஆத்துமா நற்கதி யடையாதுவிட்டால் அதனால் ஒரு பிரயோசனமில்லை. தேவனைக் காலை மாலை துதித்துக்கொண்டு, அவருடைய திருத்தொண்டுகளைச் செய்வதே எனக்கு இன்பத்தைக் கொடுக்கின்றது. கலியாணம் எனக்கு வேண்டியதே இல்லை" என்று தாயுடன் பரிந்து பேசினாள் ரோசம்மா.

அவளுடைய பெற்றாருக்குக் கோபம் கோபமாக இருந்தது. கன்னியாஸ்திரி மடத்திற் சேரும்படி யார் புத்தி புகட்டினார்களோ அத்தனை பேர்மீதும் அவர்கள் இருவரும் எரிந்து புகைந்தனர். குழந்தையாக இருந்து அவள் வளர்ந்துவந்த காலத்தில் ரோசம்மா மிகப் பயபத்தியாக இருந்து வந்தது உண்மைதான். ஆனால், அவள் ஒருபோதும் கன்னியாஸ்திரியாகச் சேரவேண்டுமென எண்ணியதே கிடையாது. கன்னியாஸ்திரிமாருடன் சேர்ந்து பழகியபின்னரே அவளுக்கு இந்த யோசனை உதித்தது. அந்த வாலிபனும் அவளை நினைந்து வாடுகின்றான். அவளுடைய எதிர்காலமும் பாலைவனமாகி விடப்போகின்றது.

இப்படி யெல்லாம் முத்தையா பிள்ளை [illegible] வியும் எண்ணி [illegible] தனர்.

ஆனாற் கன்னியாஸ்திரிமாரின்நோக்கம் தூய்மையாகவேயிருந்தது. தேவ பக்தியுள்ள ஒரு கன்னியைத் தம்முடன் சேர்த்துக்கொண்டால் ஆண்டவனின் தொண்டுகளைச் செய்வதற்கு உதவியாக இருக்குமென அவர்கள் நினைத்தனர்.

4

இதற்கிடையிற் சண்டை சன்று ஒன்றுமே தெரியாத குமாரசூரியர் வீட்டிலே பெரிய இழுபறிகள் ஏற்படலாயின. கையெழுத்து இடப்பெறாத ஒரு கடிதந்தான் இத்தனை கலவரத்துக்கும் காலாகிக்கொண்டது.

"இது பெரிய சங்கைக்குறைச்சலான காரியம். ஆள் யாரென அறிந்தால், அவன் மீது மானநஷ்டத்துக்கு வழக்குத் தொடர்ந்து விடலாம். யாரோ அவனுடைய விரோதிகள்தான் இந்த வேலையைச் செய்திருக்க வேண்டும். இக்கடிதத்திற் காணப்படுவது அவ்வளவும் உண்மையானால், எதற்காக அதை எழுதிய பேர்வழி தனது பெயரை மூடி மறைத்துக்கொள்ள வேண்டும்? என்னைப்போலவே எனது மகனும், தான் பெரிய சாதியிலே பிறந்து வளர்ந்த ஒருவன் என்று சொல்லிப் பெருமை யடித்து வருவதை நான் அறிவேன். இந்தக் கடிதத்தில் எழுதப்பட்டிருப்பன யாவும் பச்சைப் பொய்யாகும்" என்று சொல்லிக் கடிதத்தை மேசையில் எறிந்தார் மிஸ்டர் திருச்செல்வம்.

"இது உமக்கு வேணும். எனது சகோதரனின் மகள் பரிமளத்துக்கு மகனைக் கட்டிக்கொடுப்போம் என்று நான் சொன்னபோது உமக்குப் பிடிக்கவில்லை. இப்போது பார்த்தீரா காரியத்தை" என்றாள் திருச்செல்வத்தின் மனைவி.

"அந்தப் பிச்சைக்காரருக்கும் மாப்பிள்ளை கொடுப்பதா? போங்காணும் போம்" என்று சத்தம் போட்டார் திருச்செல்வம்.

"என்னுடைய அண்ணனுடைய மகள் பிச்சைக்காரி. சரி, இனி உமக்கு வரப்போகும் மருமகள் பெரிய பணக்காரியாமே! சரி நடக்கட்டும்."

"பரிமளம் இருக்கின்றாளே! அவளும் உம்மைப்போல ஒரு

## சிறு கதை

வாய்க்காரிதான். நீர் சும்மா இரும்."

"வரப்போகும் மருமகளும் உமது தாயைப்போல ஒரு வாய்க்காரி என்றுதானே அறிகின்றேன்."

"உமது பேச்சை நிறுத்தும்" என்று அதிகாரதோரணையிற் பேசினார் திருச்செல்வம்.

"உமக்கு எப்போதும் 'சுருசுரு' என்று பற்றி விடுகின்றது. இது நான் அறிந்த விஷயம்தானே?" என்றாள் மனைவி,

"நீர் என்ன குறைவோ? நிறுத்தும் என்று சொன்னால் நிறுத்தப்பட வேண்டியதுதானே?" என்று இரைந்தார் புருஷர்.

"நீர்தானே ஆரம்பித்தீர்" என்றாள் அவள்.

"என்ன சொன்னீர்......" என்று திருச்செல்வம் பேசத் தொடங்கமுன்னர் மனைவி அவ்விடத்தை விட்டு அப்பாற் சென்றுவிட்டாள்.

அவர்கள் இருவரும் அடங்கிக் குளிர்மையாக இருக்க எவ்வளவோ நேரம் எடுத்தது.

இப்படியே ஒரு அமைதியான சூழ்நிலை ஏற்பட்டுக்கொண்டிருக்கும் வேளையில் மகனும் வீடுவந்து சேர்ந்தார்.

குமாரசூரியர் உள்ளதை உள்ளபடியே கூறிவிடுவது வழக்கம். மகனுக்கு அந்தக் கடிதத்தைக் காட்டியபோது அவன், அப்பெண் உண்மையாகவே ஒரு உத்தமியெனக் கூறி அவளை ஆகாயத்திலே தூக்கிவைத்துப் பேசலானான். அவளுடைய செல்வம், குணம் என்பவற்றை ஒவ்வொன்றாக எடுத்துரைத்தான். பின்னர் ஒரு பெரிய பெருமூச்சு விட்டுக்கொண்டே சொன்னான்: "அவள்தான் என்னைக் கலியாணம் கட்டிக்கொள்ள மறுத்து விட்டாளே! அவள் கன்னியாஸ்திரியாகப் போகின்றாளாம்."

இதைச் சொல்லி முடிக்கும்போது அவனுடைய இரு கன்னங்களிலும் இரு கண்ணீர்த் துளிகள் உருண்டு ஓடின.

"யாரோ என்னுடைய பிள்ளைக்கு மருந்து போட்டுவிட்

(தொடர்ச்சி 12-ம் பக்கம் பார்க்க)


**யாழ்ப்பாணம் ஐக்கிய லாபநிதி**

**1918-ம் ஆ. ஸ்தாபிதமானது.**

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.

இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப்பணம ரூபா 34,36700. 100ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங் கட்டுமுறை:
மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாதந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்

தினசரிப் பற்று வரவு:
ஏச்சகிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்:
க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னுங் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1விகிதம், 2 விகிதம், 4 விகிதம், 6விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்:
கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும்.
இந்தியா நோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

கடன்:
நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 9 விகிதம் அறவிடப்படும். (ஈடுவைத்தவர்கள்) முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

வேண்டிய விபரங்களை என்மூலம் அறிந்து கொள்ளலாம்

S. கனகசபை
சிறப்பர்

[3645]


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

The
# EELAKESARI
NATIONALIST TAMIL WEEKLY
LARGEST CIRCULATION IN CEYLON, INDIA & MALAYAN UNION

Vol. 19 | Chunnakam, Sunday, April 10, 1949 | No. 36

# கன்னியின் கலக்கம்

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

டார்கள்" என்று அழுதாள் தாயார்.

"அம்மா, சும்மா ஒன்றும் பேசாதே. எனக்கு ஒருவரும் மருந்து போடவில்லை. அவள் மீது நான்தான் காதல் கொண்டேன்."

"சரி அதற்குமுன்னர் அவளுடைய குலம் கோத்திரத்தை அறிந்தாயோ?"

"இந்தக் காலத்தில், யார் இவற்றைக் கவனிக்கப் போகின்றனர். எல்லாரும் ஒரு குலந்தானே?"

"மகனே, நீ ஏதோ எல்லாம் புலம்புகின்றாய். என்னுடைய வீட்டிலே ஒரு நளத்தி கால் அடி வைப்பதை நான் பார்த்துக்கொண்டிருப்பேனே? என்றார் திருச்செல்வம்.

"நளத்தி"

இந்த ஒரு வார்த்தையையுங் கேட்டவுடன் குமாரசூரியர் திகைத்துப்போனார். அவர் இவ்வளவு காலமும் இருதய பூர்வமாக வணங்கிவந்த அந்தப் பெண் இப்போது அவருக்கு ஒரு கேடுகெட்ட பிறவி போல் அல்லவா தோன்றியது. வாலிபனால் இதை நம்ப முடியவில்லை.

"அப்பா, உண்மையாகவே அவள் அப்படியான ஒரு சாதியிலே உள்ளவள் தானா?"

"ஆம், மகனே, ஆட்சேபமில்லை."

"அவள் இதை எனக்கு முன்னரே சொல்லியிருக்கலாமே. நான் அவளைப் பெரிய இடத்துப் பெண் என நினைத்துப் பூசித்து வந்தேனே! அவளுக்குச் சரியான ஒரு கடிதம் எழுதி எதற்காக இப்படி என்னை ஏமாற்ற வேண்டும் என்று கேட்கின்றேன்? அப்பா என்னை மன்னியுங்கள்" என்றான் வாலிபன்.

5

அவள் எதிர்பார்த்துக்கொண்டிருந்த தினமும் விரைந்து வாலாயிற்று. ரோசம்மாவின் பெற்றோர்களால் அவளைத் தடைசெய்ய முடியவில்லை. மகளுடைய விருப்பமே ஈற்றில் வெற்றிபெற்றது. இருந்தபோதிலும் முத்தையாபிள்ளைக்கு மகள் கொண்ட கோலம் கட்டோடு பிடிக்கவேயில்லை. இருந்தபோதிலும், பாவம் அவரால் ஒன்றுமே செய்துகொள்ள இயலவில்லை.

கன்னியாஸ்திரியாகப் பிரதிக்ஞை செய்துகொள்வதற்கு முன்னர், ஒரு முக்கிய வைபவம் தேவாலயத்தில் நடைபெறுவதுண்டு. எனவே, அதற்கான உடைகளைத் தயார் செய்வதில் தையற்காரர் பலர் முத்தையாபிள்ளை வீட்டில் அமளி துமளிப்பட்டுக்கொண்டிருந்தனர். மணமகள் அணியும் உடைகளைத் தயார்செய்வதில்தான் அவர்கள் அத்தனை பேரும் முயற்சித்தனர்.

கன்னியாஸ்திரியாகச் சேர்ந்து கொள்ளும் பெண் முதல் நாள் மணமகளின் உடையிலே தேவாலயத்துக்குச் சென்று அங்கு நடைபெறும் வைபவத்திற் கலந்துகொள்ள வேண்டும். அதன்பின்னர் அந்த உடைகளைக் களைந்துவிட்டுக் கன்னியாஸ்திரிமார் அணியும் அங்கியைப் பூணுதல் வேண்டும். இது அத்தகையோர் அனுஷ்டிக்கும் ஒரு சம்பிரதாயமாகும்.

ரோசம்மா பெட்டி ஒன்றை எடுத்து உடைகளை அடுக்கிக் கொண்டிருக்கையில் மணிச் சத்தம் ஒன்று கேட்டது. தபாற்காரன் வாயலில் ஒரு கடிதத்துடன் நிற்பதைக் கண்டு அவள் அக் கடிதத்தைக் கைநீட்டி வாங்கினாள். பழக்கமான கையெழுத்துத்தான். இருந்தும், இனி எதற்காக அந்த மனுஷன் கடிதம் எழுதவேண்டும். கன்னியாஸ்திரிமார் இதை அறிந்தால் அவர்கள் என்ன நினைப்பார்கள். சீ! இன்னுமா அவருக்கு அந்த யோசனை. இப்படி நினைத்துக்கொண்டே அக் கடிதத்தை உடையாது கதிரைச் சட்டத்தில் வைத்தாள்.

ஒருவேளை அவர் தமது வாழ்த்துக்களை அனுப்பியிருக்கக்கூடுமென நினைத்து அக் கடிதத்தை மீண்டும் எடுத்து உடைத்துப் படித்தாள்.

வாழ்த்துக்குப் பதிலாக அதில் வசை மொழிகளே காணப்பட்டன. "ஆரம்பத்திலேயே என்ன சாதியென்று நீ சொல்லியிருக்கக் கூடாதா? கபடம்நிறைந்தபெண்ணே..." என்று தாறுமாறாக ஏதோவெல்லாம் அதிற் காணப்பட்டன.

"ஆண்டவனே! இதுதான் உலகம். மனுஷன் மகா சண்டாளனாக இருக்கின்றான். கிறிஸ்துநாதரை நிந்தித்து அவமதித்த மனுஷர் வேறு எவரைத்தான் சும்மா விடுவார்கள். யார், என்ன சொன்னாலும் எனக்கென்ன? ஆண்டவனே! அவர்களை இரட்சியும் என்று செபம் செய்வதே மேல்" என்று ரோசம்மா தனக்குள்ளே சொல்லிக் கொண்டாள்.

இந்தநேரம் பார்த்துத்தான் 'கார்' ஒன்று ரோசம்மா வீட்டின் 'போட்டிக்கோ' வுக்குள் மெதுவாக வந்து நின்றது. மறுகணம் இரு கன்னியாஸ்திரிமார் 'காரி'லிருந்து வெளியே வந்தனர். ரோசம்மா ஓடோடியும் சென்று அவர்களை வரவேற்று அவர்களின் கைகளைப் பிடித்து முத்தமிட்டாள். அவளுக்கு அழுகையும் வந்துவிட்டது. அழுதும் விட்டாள். அந்த அழுகையில் ஆனந்தமும் துக்கமும் கலந்திருந்தன. வசைமொழி நிறைந்த கடிதமொன்றை வாசித்துக் கலங்கிக்கொண்டிருக்கையிற் கன்னியாஸ்திரிமாரைக் கண்டவுடன் அவள் தனது உணர்ச்சிகளை அடக்க முடியவில்லை. உடனே அவள் அழுதாள். இந்தப் பரிதாப நிலையில், அவர்கள் இருவரும் தன்னைக் கன்னியாஸ்திரி மடத்துக்கு அழைத்துச் செல்ல வந்துவிட்டார்களே என்று நினைத்தவுடன் ஆனந்த மிகுதியாலும் அவள் அழுதுதள்ளவேண்டியே இருந்தது. நன்றாக அழுதாள்.

ஆனால் கன்னியாஸ்திரிகள் இருவரும் எதற்காக அந்த உச்சிவேளையிற் 'கார்' பிடித்துக்கொண்டு வீடுதேடிச் செல்லவேண்டும்?

ஆம், அவர்கள் ஒரு கட்டளையை ஏற்றுக்கொண்டே முத்தையாபிள்ளையின் மகள் ரோசம்மாவிடம் சென்றனர்.

அழுதுகொண்டு வரவேற்ற ரோசம்மாவைக் கண்டவுடன் கன்னியாஸ்திரிமார் இருவருக்கும் ஏதோ ஒருமாதிரி இருந்தது. அவர்களில் ஒருவர் சமாளித்துக்கொண்டே, ரோசம்மாவைப் பார்த்துப் பேசுகின்றார்: "மகளே, கலங்கவேண்டாம்; கடைசிநேரத்தில் எமது மேற்றிராணி ஆண்டவருக்குப் பல கடிதங்கள் வந்தன. நீர் தாழ்ந்த சாதியைச் சேர்ந்தபடியால் உம்மைக் கன்னியாஸ்திரியாகச் சேர்ப்பதையிட்டு அவர்கள் ஆட்சேபிக்கின்றனர். ஆனபடியால் உம்மைக் கன்னியாஸ்திரியாக ஏற்றுக்கொள்ளத் திருச்சபை தயாராய் இல்லை."

"என்ன? கேடுகெட்ட மனிதன்தான் என்னைத் தள்ளிவைத்தான். கேவலம், பரமபிதாவாகிய அந்த ஆண்டவனுமா என்னை ஒதுக்கித் தள்ளினர்" என்று அலறிக்கொண்டே நிலத்தில் விழுந்தாள் ரோசம்மா.

முற்றும்.


## சென்னை மந்திரிசபை

ஸ்ரீ குமாரசாமி ராஜா கிண்டி தேசாதிபதி மாளிகையில் தேசாதிபதியைச் சந்தித்துத் தமது மந்திரி சபையில் நியமித்திருக்கும் மந்திரிகளின் பெயர்களைச் சமர்ப்பித்தார். அப்பெயர்கள் வரிசையாக பின்கண்டவாறு குறிப்பிடப்பட்டிருந்தன: பிரதமர் ஸ்ரீ. பி. எஸ். குமாரசாமி ராஜா, மந்திரிகள்: டாக்டர் டி. எஸ். எஸ். ராஜன், ஸ்ரீ. எம். பக்தவத்சலம், ஸ்ரீ. பி. கோபால் ரெட்டி, ஸ்ரீ. கே. மாதவ மேனன், ஸ்ரீ. எச். சீதாராம ரெட்டி, ஸ்ரீ. ஏ. பி. ஷெட்டி, ஸ்ரீ. கே. சந்திரமௌளி, ஸ்ரீ பி. பரமேஸ்வரன், ஸ்ரீ. என. சஞ்சீவி ரெட்டி.

ஸ்ரீ குமாரசாமி ராஜா சமர்ப்பித்த மந்திரிகள் வரிசையில் பிரதமராக இருந்த ஸ்ரீ ஓ பி. ராமசாமி ரெட்டியார் தவிர மூன்று மந்திரிகள் பெயர் இல்லை.

ஸ்ரீ டி. எஸ். அவினாசிலிங்கம் செட்டியார், ஸ்ரீ வி. கூர்மையா, டாக்டர் குருபாதம் முதலியோர் அதில் இல்லை.

ஸ்ரீ ராஜா சமர்ப்பித்துள்ள பெயர்களில் பிரதமர் ஸ்ரீ குமாரசாமி ராஜாவைத் தவிர இரண்டு புதியவர்கள் இடம் பெறுகின்றனர். ஸ்ரீ பி. பரமேஸ்வரன், ஸ்ரீ என். சஞ்சீவிரெட்டி என்ற இருவருமே புதிய மந்திரிகள். அவர்களிருவரும் சட்டசபை அங்கத்தினர்கள்.




இப்பத்திரிகை, யாழ்ப்பாணம்—மயிலிட்டிதெற்கு திருமகள் நிலையம் கா. பொன்னையா அவர்களால் சுன்னுகம் திருமகள் அழுத்தகத்தில் 1949-ம் ஆ. ஏப்பிரல்மீ 10உ ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org